# சுத்தசன்மார்க்க மரபு நான்கு

**வள்ளலார் பெற்ற சுத்தசன்மார்க்கத்திற்கு**

**கடவுள் குருவாக இருந்து உரைத்த மரபு நான்கு :**

சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான் என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலம்ஐந்து வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம் எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே

www . atruegod . org

www.[redacted].org

www. ATRUEGOD . ORG

Website by :

M/s. **Karunai Sabai Salai Trust, Madurai.**
Founder : **Mrs. V. Ramalakshmi Elango, M.A.,**
E-mail : apjarul1@gmail.com



வள்ளலார் படங்கள்
அன்பர்களின் குறிப்பினால் வரையப்பட்டவையாகும்.

**அவரது ஒளிதேகம் எந்தஒரு**
**புகைப்படக்கருவியிலும் பதியவில்லை.**

## சுத்தசன்மார்க்க மரபு நான்கு

**வள்ளலார் பெற்ற சுத்தசன்மார்க்கத்திற்கு**

**கடவுள் குருவாக இருந்து உரைத்த மரபு நான்கு :**

சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்

தான் என அறிந்தஅறிவே

தகும்அறிவு மலம்ஐந்து வென்றவல் லபமே

தனித்தபூ ரணவல்லபம்

வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்

விளையவிளை வித்ததொழிலே

மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே

வியந்தடைந் துலகம் எல்லாம்

மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை

வானவர மேஇன்பமாம்

மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்

மரபென் றுரைத்தகுருவே

www. atruegod . org

**WWW.[redacted].org**

WWW. ATRUE GOD . ORG

*Website by :*

M/s. **Karunai Sabai Salai Trust, Madurai.**

Founder : **Mrs. V. Ramalakshmi Elango, M.A.,**

E-mail : apjarul1@gmail.com

திருவருட்பிரகாச

# வள்ளலார்



# சுத்தசன்மார்க்கம்

## (உண்மை பொதுநெறி)

- APJ. அருள் -

உரைநடை - ஆய்வு நூல்

சிறப்பு மலர்

வெளியீடு : கருணை இதழ்

# சுத்த சன்மார்க்கத்தில் வள்ளலார் கண்ட உண்மைக்கடவுள்



இப்போது வருகிற
நமது கடவுள் இதற்கு முன்
சமய சாத்திர புராணங்களில்
வந்ததாகச்
சொல்லுகின்றபலவகைப்பட்ட
ஏற்பாட்டுக் கர்த்தர்கள்.
மூர்த்திகள், கடவுளர், தேவர்,
அடியார், யோகி, ஞானி
முதலானவர்களில் **ஒருவரல்ல.**
இப்படி சொல்லப்பட்ட எல்லா
மூர்த்திகளும்,
எல்லாத்தேவர்களும்,
எல்லாக்கடவுளரும்,
எல்லாத் தலைவர்களும்,
எல்லா யோகிகளும், எல்லா
ஞானிகளும் தங்கள்
அனுபவங்களைக் குறித்து
எதிர்பார்க்கின்றபடி
எழுந்தருளுகின்ற
**தனித்தலைமைப் பெரும்பதி.**

**- வள்ளலார்**
**அறிவிப்பு நாள் : 12.4.1871**

M/s. Alamelu Printing Press, Madurai-1.

நூலின் பெயர் : திருவருட்பிரகாச வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம்

ஆசிரியர் : ஏ.பி.ஜெ. அருள்

வெளியீடு : கருணை இதழ் சிறப்பு வெளியீடு
RNI : TNBIL/2010/34670/ENG/TAM/M
34, பூம்புகார் நகர் வடக்கு விரிவாக்கம்,
உத்தங்குடி, மதுரை - 107.

அளவு, தாள், படிகள் : 1 x 8 புல்ஸ்கேப், 5,000

பக்க எண்ணிக்கை : 96

முதல் பதிப்பு : 2013 தைப்பூசம்

நூலின் விலை : Rs. **40.00**

வள்ளலாரின் சுத்தசன்மார்க்க
**உண்மை பொது நெறியை**
உள்ளது உள்ளபடி
அறிந்திட மாதந்தோறும் வெளியாகும்
**கருணை இதழ்** வாங்கி
படிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

இதழுக்கான ஆண்டு சந்தா ` 100

Bank : **S.B.I.,**
Othakadai, Madurai -625 107
in favour of KARUNAI
**A/c No. : 31599470881**
**Branch Code 2246**
**IFSC Code: SBIN0002246**

கருணை இதழின் வெளியீடான
வள்ளலாரின் சுத்தசன்மார்க்க சிறப்பு மலருக்கு
வாழ்த்துக்களும், நல் ஆதரவும் நல்கி மகிழ்கிறோம்.


**கருணை சபை சாலை அறக்கட்டளை**
பதிவு எண். 4/2009
மனை எண். 34, கிரேஸ் ஹால், பூம்புகார் நகர் வடக்கு விரிவாக்கம்,
உத்தங்குடி, மதுரை - 625 107. போன் : 94876 83114


சாதியு மதமுஞ் சமயமும் பொய்யென
ஆதியி லுணர்த்திய வருட்பெருஞ் ஜோதி - திருஅகவல்



நிறுவநர் மற்றும் முதன்மை நம்பகர்
வெ. இராமலெட்சுமி இளங்கோ M.A.,
மற்றும் கருணை சபை சாலை நம்பகர்கள் / அன்பர்கள்

நெறி பரப்பும் பணிக்கு உதவுங்கள்.

Bank I.O.B., Arignar Anna Nagar, Madurai-20.
in favour of KARUNAI SABAI SALAI TRUST
A/c. No. 065101000031157

# திருவருட்பிரகாச

# வள்ளலார்



# சுத்த சன்மார்க்கம்

## (உண்மைப்பொதுநெறி)

- APJ. அருள் -

வெளியீடு : 'கருணை' இதழ்



**V. BHARATHIDASAN**
Advocate
Standing Counsel for Chennai Corporation

**Office / Residence :**
No. 22, (L-45), Second Main Road,
Kamaraj Nagar West,
Thiruvanmiyur, Chennai-600 041.
Ph. : 24486354

**Chamber :**
119, Additional Law Chambers
High Court Buildings, Chennai-600 104.
Ph. : 2534 1508
Mobile : 94443 83139

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

# வாழ்த்துரை

வள்ளலாரின் முடிபான கொள்கை என்ன என்பது பற்றி தற்போது நிலவிவரும் தவறான சில கருத்துக்களுக்கு நல்ல பதில் சொல்லும் விதமாக இந்த நூல் அமைந்துள்ளது. அருட்திரு வள்ளலார் அவர்கள் தனது முந்தைய கொள்கைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு, சமயம் மீது வைத்திருந்த பற்றை கைவிட்டு, **புது வழி** கண்டு அதற்கு சுத்த சன்மார்க்கம் என்று பெயரிட்டார். 12-4-1871ல் சுத்த சன்மார்க்க கடவுளை வெளிப்படுத்தினார். ஆறாம் திருமறையில் தனது புதிய முடிவுகளை தெரிவித்தார். தனது மாற்றத்திற்கான காரணங்களையும் தெளிவுபட வெளிட்டார். சத்திய ஞானசபை அமைத்தார். அதன் வழிபாட்டு விதிமுறைகளை வகுத்தார். அவர்தம் தொண்டர்கள் அவற்றை பின்பற்றினர்.

ஆனால் கடந்த சில காலமாக அவர் காட்டிய நெறிகளை அழிக்கும் முகமாக சில தவறான நடைமுறைகள் சத்திய ஞான சபையில் நிறைவேற்ற முயற்சி நடக்கின்றது. அவற்றை தடுக்க அவர்தம் தொண்டர்கள் நீதிமன்றத்தை நாடவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. நீதிமன்றமும் நல்ல தீர்ப்பை வழங்கி அருட்திரு வள்ளலாரின் போதனைகளை உறுதிப்படுத்தி அவர்தம் தொண்டர்களின் கவலைகளை களைந்தது. இந்த வழக்கில் உயர்நீதிமன்றத்தில் வாதாட எனக்கு பெரும் வாய்ப்பு கிடைத்தது. இந்த சமயத்தில் இது போன்ற நூல்கள் வள்ளலாரின் முடிபான கொள்கைகளை விளக்கும் வண்ணம் வெளிக்கொண்டுவரப்பட்டது நல்ல முயற்சி. அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய செயல். "கடைவிரித்தேன் கொள்வாரில்லை கட்டிவிட்டேன்" என்ற நிலை ஏற்படா வண்ணம் அருட்திரு வள்ளலார் அவர்தம் நெறி உலகமெல்லாம் பரவ பெரும் முயற்சி செய்யும் நூல். ஆசிரியைக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். "**கருணை இதழ்** " நல்ல பணி செய்து மேலும் வளர்ந்து, சுத்த சன்மார்க்க நெறி பரப்ப என் உளமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன் :
**V. பாரதிதாசன்**



எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !

A. கதிரேசன்,
கே.கே.நகர், மதுரை-20.
செல் : 94439 28696

## வாழ்த்துரை

உலகில் உள்ள எல்லா சமயங்களும், மார்க்கங்களும் **எல்லாம் வல்ல இறைவனைப்** போற்றித் துதிக்கின்றன. மக்கள் அவரவர் சமயங்களில் நம்பிக்கை கொண்டு அச்சமய கடவுளை வணங்குகிறார்கள். திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்கள் கண்ட சுத்த சன்மார்க்க கொள்கைகளைக் காணும் பொழுது அவை உயர்வு உடையதாகக் காணப்படுகிறது.

- கடவுள் ஒருவரே
- அக்கடவுளின் நிலை அறிய ஒழுக்கம் நிரப்பி கொள்ளுதல் வேண்டும்
- கருணை ஒன்றேமார்க்கத்தின் சாதனம்
- அக்கருணை விருத்திக்குத் தடையாக இருக்கும் சாதி, சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களை ஒழித்து, பொது நோக்கம் வருவித்தல் வேண்டும்.
- கடவுள் உண்மை குறித்து நல்ல விசாரணை செய்தல் வேண்டும்.
- உண்மை கடவுள் அருளால் மரணமில்லாப் பெருவாழ்வு பெறலாம்.

31-01-1873 அன்று திருஅருட்பிரகாச வள்ளலார் அவர்தம் மார்க்கத்தின் பெரும்பயனாகிய "**மரணமில்லாப் பெருவாழ்வை**" (ஒளிதேகம்) பெற்றார்கள். இந்த அற்புத உயர்வான நிகழ்வு

போதியளவு உலகிற்கு வெளிப்படுத்தப்படவில்லை என்றேகூறலாம்.

திருஅருட்பிரகாச வள்ளலார் குறித்து வெளிவரும் நூல்களிலும், செய்திகளிலும் அவரின் முந்தைய சமயப்பற்றிலேயே அவரை வெளிப்படுத்துகிறார்கள் என்பதே இந்நூலின் ஆசிரியையின் ஆதங்கம்.

மேலும், திருஅருட்பிரகாச வள்ளலார் தான்கொண்டிருந்த சமயப் பற்றினை முற்றிலும் கைவிட்டுவிட்டு ஓர் "உண்மைப் பொது நெறியை" உலகிற்கு வெளிப்படுத்தினார் என்பதை ஆதாரமாக நிருபித்த ஆசிரியையின் இந்த ஆய்வு மிகவும் பாராட்டுக்குரியது.

எந்த உண்மையை மக்கள் புரிந்து கொள்ளவில்லை என திருஅருட்பிரகாச வள்ளலார் சொன்னார்களோ, அந்த உண்மையை இந்த ஆய்வு நூல் வெளிப்படுத்துகிறது. நடுத்தர பொருளாதார குடும்ப சூழ்நிலையில் ஆசிரியை ஏபிஜெ அருள் இருந்தபோதிலும், திருஅருட்பிரகாச வள்ளலாரின் முடிபான நெறியை உள்ளது உள்ளபடி உலகிற்கு வெளிப்படுத்தியே ஆக வேண்டும் என்ற உன்னதமான செயலில் களம் இறங்கி உள்ளதற்கு எனது வாழ்த்துக்களையும், ஆதரவையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**ஒழுக்கத்தையும், உண்மையை விசாரித்தலையும்**
**பிரதானப்படுத்தும் உயர்வான நெறியாம்**
**சுத்தசன்மார்க்க நெறி எங்கும் பரவட்டும்**

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !**

அன்புடன்

**A. கதிரேசன்**

# முன்னுரை

*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி*
*தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி*

அன்பர்கள் அனைவருக்கும் வணக்கம். கடவுள், கடவுள் நிலை குறித்து பல்வேறு சமய மத மார்க்கங்கள் உலகில் உள்ளது. மேற்படி சமய மத மார்க்கங்களில் உள்ள கடவுளர்கள் மற்றும் அதனதன் "கட்டுப்பாட்டு ஆசாரங்களினால்" மனிதர்கள் வேறுபட்டு உள்ளனர். அதன் அடிப்படையில் ஏற்படுகின்ற உயர்வு தாழ்வினால் கருத்து மோதல், பகைமை, சண்டை சச்சரவு நடந்தது, நடக்கிறது, நடக்கும் என்பதை எவரால் மறுக்க முடியும்? இங்ஙனம் நடைபெறுவதற்கான அடிப்படை காரணம் என்ன? எனப்பார்க்கும் போது உண்மை அன்பு, உண்மை இரக்கம், உண்மை அறிவு, நம்மிடத்தில் ஏற்படாது இருப்பதே அன்றி வேறு ஒன்றுமில்லை.

அன்பர்களே! விலங்கினமும் மனிதர்களும் ஐந்தறிவு உள்ள உயிரினங்கள் ஆகும். "ஆறறிவு" மனிதர்களிடத்தில் இல்லையா? என்றால், மனித தேகம் ஒன்றுதான் ஆறறிவை பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறது என்பதை சத்தியமாக அறிதல் வேண்டும். இங்கு "ஆறறிவு" என்பது யாது? என்பதை நாம் அறிதல் வேண்டும்

ஆறாவது அறிவு என்பது "உண்மையறிதல்" ஆகும். அதற்கு "உண்மை அன்பு" (Love) வேண்டும்.

"அன்பு" என்றால் என்ன?

அன்பு என்பது தொடர்புடையார் மாட்டு உண்டாகும் பற்று (Grace / Attachment) என்கிறது அகராதி.

நமக்குத் "தொடர்புடையார்" யார்?

நம்மிடம் "உயிர்" உள்ளதால் உயிர் உடைய அனைத்துமே அனைவருமே நமக்கு தொடர்புடையவர்கள் ஆவார்கள்.

மேலும்,

நாம் வாழ்கின்ற"பிரபஞ்சமாகிய இயற்கையுடனும்" நாம் தொடர்புடையவர்கள். மேற்படி இயற்கையை, "கடவுள்" என இங்கு கொள்வோம். அந்த இயற்கையின் (கடவுளின்) உண்மையறிதல் வேண்டும். அதுவே உண்மை அன்பாகும். "கருணை" என்பதற்கு பொருள் என்னவென்று திருஅருட்பிரகாச வள்ளலார் விளக்கும் போது; **"கருணை என்பது எல்லா உயிர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்தில் அன்புமே என்கிறார்கள்"**. என் மார்க்கம் **"அறிவு மார்க்கம்"** என்கிறார்கள்.

ஆக,

- எல்லா உயிர்களிடத்தும் "தயவும்"
- இயற்கையிடத்தில் (கடவுளிடத்தில்) "அன்பு"மே ஆறறிவு ஆகும்.

நிற்க !

மேற்படி "ஆறாவது அறிவு" (உண்மையறியும் அறிவு) பெறுவதற்கான தகுதி படைத்திருக்கும் ஒரே தேகம் மனித தேகம் தான். கண்ட நெறி உண்மையாகவும், காட்டிய வழி

பொதுவாகவும் உள்ள மார்க்கமே வள்ளலார் கண்ட "**சமரச சுத்தச்சன்மார்க்கம்**" ஆகும். தான் வைத்திருந்த **சமயப் பற்றினை கைவிட்டு விட்டு** உண்மை பொது நெறியை உலகிற்கு 1871ம் ஆண்டு வெளிப்படுத்தினார்கள். அக்காலத்தில் வள்ளலாரின் "தனி நெறியை" தெரிந்து கொண்டவர்கள் எத்தனை பேர் எனப்பார்க்கும் போது, அதற்கு வள்ளலாரின் சத்திய வாக்கியம் இதோ:-

**"உண்மை சொல்ல வந்தனனே-என்று**
**உண்மை சொல்லப் புகுந்தாலும்**
**தெரிந்து கொள்வாரில்லை."**

அன்பர்களே!

சாதி, சமயங்களின் மீது கண்மூடித்தனமான வெறியும் பற்றும் கொண்டிருந்த அக்காலங்களில் வள்ளலாரின் உயர்வான உண்மைப் பொது நெறியைத் தெரிந்து கொள்ள முன் வந்திருக்கமாட்டார்கள் என்பதை நாம் உணர முடிகிறது.

இன்று அந்த உண்மையைக் குறித்து தெரிந்து கொள்ளும் தருணம் வந்துள்ளது. அந்த உண்மையை உள்ளது உள்ளபடியே இந்நூலின் வாயிலாகத் தாழ்மையுடன் ஒருவாறு தெரிவிப்பதற்கு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

மேலும், வள்ளலாரை அவர்தம் முந்தைய சமயப்பற்றிலேயே உலகிற்கு வெளிப்படுத்தும் செயல்களே அதிகம் நடைபெறுவதால், வள்ளலாரின் முடிபான நெறியை எடுத்துச்சொல்ல வேண்டிய கடமை வந்துள்ளது எனக்கருதுகிறேன்.

உயர்ந்த உண்மைப்பொதுநெறியை எனக்குத் தெரியப்படுத்தி திரு அருட்பிரகாச வள்ளலாரின் தனிநெறி

குறித்து ஆய்வு செய்யத் தூண்டியவரும் வள்ளலார் நெறியில் பிறழாது வாழவேண்டுமென தன் கருத்தில்கொண்டு நன்முயற்சியை மேற்க்கொண்டிருக்கும் என் கணவருக்கும், இந்நூல் சிறப்புடன் வெளிவருவதற்கு உதவிய Mrs. & Mr. A.கதிரேசன்ஐயா-சிட்டுஆச்சி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

வள்ளலாரின் முடிபான நெறியிலேயே வடலூர் நிலையங்கள் செயல்பட வேண்டும் என சட்டரீதியாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் ஒன்று 'சத்திய ஞான சபை' வழக்கு எனது சுயநலமற்ற நன்முயற்சியை சரியாக தெரிந்துகொண்டு பல வழக்குகளில் வாதாடிய மதிப்பிற்குரிய உயர்திரு. V.பாரதிதாசன், திரு. M.சரவணக்குமார் அவர்களுக்கு எனது நன்றிகள்.

சுத்தசன்மார்க்கிகளின் கோரிக்கைகளை ஏற்று நிலையங்களில் நடைபெற்று வந்து முரணான செயல்களை நிறுத்தி வள்ளலாரின் முடிபான நெறிப்படி நிலையம் நடத்தி வரும் மற்றும் மேலும் சிறப்பாக நடத்த முன்வந்துள்ள தெய்வ நிலைய நிர்வாக அதிகாரி, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அதிகாரிகள் மற்றும் மேதகு தமிழக அரசாங்கத்திற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலில் உள்ள எழுத்துப்பிழை, இலக்கணப் பிழைக்கு என்னை மன்னித்து, மொழிக்கு அப்பால் உள்ள உண்மையை எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

அன்புடன்

**வெ. இராமலெட்சுமி இளங்கோ,** M.A., (Sociology)

பதிப்பாசிரியர் : கருணை மாத இதழ்

நிறுவனர் : கருணை சபை-சாலை

* * * * *



## அற்புதம்

திருஅருட்பிரகாச வள்ளலாரை அவரால் கைவிடப்பட்ட முந்தைய சைவ சமய நெறியிலேயே வெளிப்படுத்தும் செயல்களுக்கு முற்றிலும் முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு ஆதாரங்களுடன் கருணை இதழ் இந்நூலை வெளியிட்டுள்ளது. திருவருட்பிரகாச வள்ளலாரின் தெய்வ நிலையங்களில் நடைபெற்று வந்த பல முரணான செயல்களை சட்டத்தின் வாயிலாக தடுத்து அங்கு சுத்த சன்மார்க்க நெறி அடிப்படையில் வழிபாடு நடைபெற வழிவகை செய்ததற்கும், பல வருடங்களாக அன்பர்கள் பலர் வள்ளலார் மீது பற்று வைத்திருந்தாலும் அவர்கள் தங்களை ஏதேனும் ஒரு ஆசாரங்களில் ஈடுபடுத்தியிருப்பதை, தனது கட்டுரையால் சுட்டிக்காட்டி அந்த அன்பர்களிடத்தில் ஒரு உண்மை மாற்றத்தை ஏற்படுத்தியதற்கும், இந்திய நாடு தாண்டியும் வள்ளலாரை சமய ஆசாரங்களில் காட்டிய அபக்குவ மற்றும் வல்லபத் தன்மைகளை தவறு என எடுத்துரைத்து எல்லோருக்கும் உண்மைப் பொது நெறியாக விளங்கும் சுத்தசன்மார்கத்தை உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்தும் செயலுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளும், நன்றிகளும் நல்குவது எனது கடமை என கருதுகிறேன். பல நற்காரியங்களுக்கு உடன் பணியாற்றியதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் நற்பணி தொடரும்.

அற்புதம் அற்புத மே - அருள்
அற்புதம் அற்புத மே.

சாதி சமயச் சழக்கெலாம் அற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
மேதினியிற் சாகா வித்தையைக் கற்றது
மெய்யருட் ஜோதிஎன் உள்ளத்தில் உற்றது.

அற்புதம் அற்புத மே - அருள்
அற்புதம் அற்புத மே.

அன்புடன்
**G. சுப்பிரமணியன்**
குறிஞ்சிப்பாடி.
செல் : 98428 18242



கருணை இதழ் சிறப்பு வெளியீட்டிற்கு எங்களது மனமார்ந்த பாராட்டுகளும், வாழ்த்துகளும். இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுப்பு 51 (A)(g) "எல்லா உயிர்களிடத்தும் பரிவு காட்டிடல் வேண்டும்" என்ற அடிப்படையில் அரசு பொதுவிழா மற்றும் கூட்டங்களில் புலால் உணவு தடை செய்தல் வேண்டும் என்ற உன்னதமான ஆசிரியரின் நன்முயற்சி பாராட்டுக்குரியது.

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க.**

அன்புடன்

**SR. கண்ணப்பன்-மீனாம்பிகை கண்ணப்பன்**

மதுரை. செல் : 94430 22146



திருவருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் அவர்களை அவர்தம் முடிபான சுத்த சன்மார்க்க கொள்கையிலேயே வெளிப்படுத்துவதே நியாயம் மற்றும் சட்டப்படி சரியாகும் என்பதை நிலைநாட்டுவதற்கு தங்களின் 7 வருட கால முயற்சியை நான் அறிவேன். உண்மை, துணிவு, அயராத உழைப்பு, விடாமுயற்சி இவையே வள்ளலார் மற்றும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்தில் சம்மதத்தை தங்களுக்கு பெற்றுத்தந்தது என்பதை நான் அறிவேன். நீங்க நல்லா இருக்கனும். இருப்பீங்க. சுத்த சன்மார்க்க சகோதர, சகோதரிகள் என்றும் உறுதுணையாக இருப்போம். இது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருள்.

மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையும் களவுமற்றைப் புலையும் அழிந்தது.

அன்புடன்

**A. செங்கான்**

அரியலூர்.

செல் : 95243 52916



வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நெறி அடிப்படையில் வரும் இதழ்கள் மிகவும் குறைவு. இந்நிலையில் முடிபான கொள்கையை மட்டுமே வெளிப்படுத்தும் கருணை இதழுக்கு என் வாழ்த்துக்கள். வள்ளலாரின் உண்மைப் பொதுநெறி இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. வெளிப்படும் காலம் இத்தருணமே.

அன்புடன் : **மு. இராமன்**
சன்மார்க்க ஆராய்ச்சி மையம், மதுரை.
செல் : 92442 31072



வள்ளலாரின் மார்க்கத்தில் ஆசிரியையின் இப்பணி ஓர் புரட்சியே. வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நெறி உயர்வானது. காரணம் அது ஒன்றே எல்லோருக்கும் பொதுவாக இருந்து உண்மையை உரைக்கிறது. "கருணை இதழ்" க்கு வாழ்த்துக்கள்.

அன்புடன் : **P. சுப்பாராஜ்**
உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
செல் : 94437 94751

எங்களுக்குள் மற்றும் திரு. சுப்பிரமணியம், திரு. பெருமாள் போன்ற சில அன்பர்களின் மனதினிலே பல வருடங்களாக இருந்து வந்த எண்ணங்களை சுயநலமற்ற நன்முயற்சியில் இடைவிடாது பணியாற்றி சில வருடங்களிலேயே வெற்றிக்கண்ட தங்களை நாங்கள் பாராட்டுவதில் பெருமை கொள்கிறோம். எங்களின் சுத்த சன்மார்க்க பணி என்றும் தொடரும்.

அன்புடன்

**P.R. விஜயராகவன் C. ஆறுமுகம் K.M. வரதராஜுலு**
**D. மோகன் V. தங்கராஜன்**



வள்ளலாரின் பல வழக்குகளில் வாதாடுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த ஆசிரியைக்கு என் நன்றிகள். திரு. இராமலிங்கம் சுவாமிகளை முடிபான நெறியில் வெளிப்படுத்துவதே சரியாகும். அவரால் லட்சியம் வையாது விடப்பட்ட முந்தைய சமயத்தில் வெளிப்படுத்தும் செயல் சட்டப்படி குற்றமே. அன்று வழக்கிற்காக அவரின் நெறிகளை எடுத்துரைத்தேன். இன்று அந்நெறிகள் என் சிந்தனையில் நல்ல விசாரணை செய்ய வைத்துக்கொண்டிருக்கிறது.

அன்புடன் : **M. சரவணக்குமார்,** உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
செல் : 94442 79557



திருவருட்பிரகாச வளளற்பெருமானின் முடிபான சுத்த சன்மார்க்க நெறியை மட்டுமே எடுத்துரைத்து வெளிப்படுத்திய உண்மைச் செயலே கருணை இதழின் வெற்றிக்கு காரணம். ஏ.பி.ஜெ. அருள்அம்மா அவர்களின் கட்டுரைகள் அன்பர்களிடத்தில் ஒரு விழிப்புணர்வையும், நல்லவிசாரணையையும் செய்ய வைத்தது. தங்களுக்கும் தங்கள் குடும்பத்தார்களுக்கும் எனது ஆசியும், ஆதரவும் என்றும் உண்டு.

அன்புடன் : **A.G. சந்திரமோகன்,** மதுரை.
ஆசிரியர், கருணை இதழ்



திரு. வேலாயுத முதலியாரிலிருந்து இன்று வள்ளலார் வழியில் தங்களை முன்னிலைப்படுத்திக்கொண்டிருக்கும் சில அறிஞர்கள் வரை நடப்பது என்னவென்றால் வள்ளலாரால் முற்றிலும் கைவிடப்பட்ட சைவ சமயத்திலும் சமய ஸ்தோத்திரப் பாடல்களிலும் அவரை வெளிப்படுத்தும் செயல்கள்தான் நடைபெற்றது. நடைபெறுகிறது. இச்செயல் எனக்கும், வள்ளலார் நெறியில் பற்றுக்கொண்டிருக்கும் சில சுத்த சன்மார்க்கிகளுக்கும் மற்றும் வடலூர் வாழ் சில அன்பர்களின் மனதிற்கும் வேதனைகளாக பல வருடங்களாக இருந்து வந்தது. இன்று சட்டத்தின் துணை கொண்டு பல வெற்றிகள் கிடைக்கச் செய்தமைக்கு தங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். சுத்த சன்மார்க்க நெறி எங்கும் பரவட்டும்.

அன்புடன் : **H. தாயுமானவர்,** வழக்கறிஞர்
செல் : 94436 94354



உள்ள உண்மையை
செய்த பணியால்,
நன்கு வெளிப்பட்டது.
எனது வாழ்த்துக்களும், ஆசிகளும்.

அன்புடன் : **க.இரா.முத்துச்சாமி,** திருப்பூர்.
இயற்கை வாழ்வகம், 0421-2240979



இந்த சிறப்பிதழ் - ஒரு சிறந்த பணி
மென்மேலும் வளர வாழ்த்துகிறேன்.

அன்புடன் : **R.சரவணன்,** மணி மெடிக்கல்ஸ், மதுரை.



என் செயல்,

அறிவின் கட்டளை, வாழ்வின் கடமை, இலட்சியத்தின் வெளிப்பாடு என்று நீங்கள் அன்று என்னிடம் கூறியதை இன்று நினைத்துப்பார்க்கிறேன். சகோதரி திருமதி. ஏ.பி.ஜெ. அருள் (எ) இராமலெட்சுமி இளங்கோவிற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்க சத்திய அறிவுடன். பெறுக மரணமில்லாப் பெருவாழ்வு

அன்புடன் : **K.S.சகாதேவராஜா,** இராஜபாளையம்.
செல் : 99447 33328

**நன்றி !** **நன்றி !** **நன்றி !**



சமயத்தில் இருந்த லட்சியத்தை கைவிட்டுவிட்டு ஓர் உண்மைப் பொதுநெறியை கண்டு வெளிப்படுத்தியவர் வள்ளலார். அவர் வெளிப்படுத்திய முடிபான நெறியை உள்ளது உள்ளபடி உரைத்ததை தவிர நான் வேறு ஒன்றும் செய்யவில்லை.

வாழ்த்துக்கள், ஆதரவுகள், நல்கிய சான்றோர், பெரியோர், அன்பர்கள் அனைவருக்கும் எனது பணிவான நன்றிகள்.

எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே ஏத்து !

அன்புடன் : **வெ. இராமலட்சுமி இளங்கோ,** மதுரை
செல் : 90950 50785

# வள்ளலார்

இந்தியா, தமிழ்நாடு, கடலூர் மாவட்டம், வடலூர் அருகில் மருதூர் என்றஊரில் சைவ சமயம் சார்ந்து வாழ்ந்து வந்த ஒரு குடும்பத்தில் ஐந்தாவது மகவாக 1823ம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் பிறந்தவர் வள்ளலார். இவரது இயற்பெயர் இராமலிங்கம்.

## சமயத்தில் பற்று

வள்ளலாரின் குடும்பத்தார்கள் சைவ சமயத்தைத் தழுவி வந்தார்கள். அதனால் வள்ளலார் அச்சமயத்தின் மீது பற்றுக் கொண்டு வாழ்ந்து வளர்ந்து வந்தார்கள். இளம் வயதில் திரு.இராமலிங்கம் (வள்ளலார்) அவர்கள் சென்னையில் அமைந்துள்ள ஒரு முருகன் ஆலயம் சென்று கவிகள் பாடி துதித்தார்கள். அக்கோயிலுக்கு "கந்த கோட்டம்" எனப் பெயரிட்டு அழைத்தவர் வள்ளலார் இராமலிங்கம் அவர்களே. அன்பு, ஒழுக்கம், கருணை, இரக்கம் இவை குறித்து இவர் பாடிய பாடல்கள் மிக்க சிறப்புடையதாகவும், மக்களிடையே பெரும் வரவேற்பையையும் பெற்றது.

சமயக்கடவுளர்கள் குறித்து பாடல்கள் நிறைய பாடியுள்ளார்கள். புராணங்களை மிகத் தெளிவாகச் சொல்லி ஆற்றிய சொற்பொழிவுகள் ஏராளம். இங்ஙனமாக அவர்தம் இளம்பருவகாலங்கள் சைவ சமயத்தில் பற்றுடனும், ஒழுக்கங்களில் மேன்மையுடனும் கடந்தன.

**பன்முக ஞானம்**

பன்முக ஞானம் பெற்ற திரு.இராமலிங்கம் பின்பு மக்களால் "வள்ளலார்" என்றழைக்கப்பட்டார்கள். அவர் நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகாசிரியர், போதகாசிரியர், ஞானாசிரியர் வியாக்கியானகர்த்தர், சித்த மருத்துவர், சீர்திருத்தவாதி, அருட்கவிஞர், அருள்ஞானி என்று அனைத்து திறமைகளையும் பெற்று தனிச்சிறப்புடன் முதன்மையாக விளங்கினார்கள்.

**நூல்கள்:**

- மனுமுறைகண்ட வாசகம்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்

**உரைநூல்கள்:**

- ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி உரை
- தொண்ட மண்டல சதகத்தின் கடவுள் வாழ்த்துப் பாடல் உரை

**பதிப்புகள்:**

- மேற்படியான உரைநூல்களை பதிப்பித்தார்கள்
- மேலும் 'சின்மயதீபிகையை'யும் பதிப்பித்தார்கள்

**வியாக்கியானங்கள்:**

- "உலகெலாம்" என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்.

- "தமிழ்" என்னும் சொல்லுக்கிட்ட உரை

**சித்த மருத்துவம்:**

- மருத்துவ குணங்கள் குறித்த அட்டவணை.
- தாமே பல மருந்துகளை செய்தது.
- கடிதங்கள் வாயிலாக மருந்து குறிப்புகள்.
- ரசவாதம் பொன் செய்வதில் வல்லப தன்மை.

**சீர்த்திருத்தங்கள்:**

- புருட(ஷ)ன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டாம். மனைவி இறந்தால் புருடன் வேறு கல்யாணம் செய்ய வேண்டாம்.
- கர்ம காரியங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம்.
- சாதி சமய கட்டுபாட்டு ஆசாரங்களை விட்டு ஒழியுங்கள்.

**முதன்மையான செயல்கள்:**

- பொது மக்களுக்கு முதன் முதலாக திருக்குறள் வகுப்பு நடத்தியவர்.
- முதன்முதலாக முதியோர் கல்வியை ஏற்படுத்தியவர்.
- மும்மொழி "(தமிழ், வடமொழி, ஆங்கிலம்) வகுப்பு நடத்தியவர்.
- தமிழ்நாட்டின் முதல் கல்வெட்டு ஆராய்ச்சியாளார்.
- 19ம் நூற்றாண்டில் கடவுள் உண்மையறிய "ஒரு தனி மார்க்கத்தை " நிறுவியவர்.

- சன்மார்க்கத்திற்கென சங்கம், சபை, கொடி, நெறி, கட்டளைகள், தடைகள் ஆகியவை வகுத்தவர்.
- எந்தவொரு மார்க்கமும் வெளிப்படுத்திடாத "மரணமில்லா பெருவாழ்வு" என்றபெரும்பயன் இறையருளால் பெறலாம் என வெளிப்படுத்தினார்கள்
- இவர் கண்ட மார்க்கத்தின் கடவுள், இதுவரை சமய மத மார்க்கங்களில் வெளிப்படுத்திய கடவுகளில் ஒருவரல்ல என்கிறார்.

  பன்முக ஞானம் பெற்றியிருந்த வள்ளலார் கண்டு வெளிப்படுத்திய மார்க்கமும் ஒரு புதிய மார்க்கம்.

## முக்கிய குறிப்புகள் :

| | | |
|---|---|---|
| பிறந்த இடம் | : | மருதூர் |
| பிறந்த நாள் | : | 05-10-1823 |
| சென்னையிலிருந்து கருங்குழியில் வசிப்பு | : | 1858-1867 |
| சமரச வேத சன்மார்க்கச் சங்கம் | : | 1865 |
| முதல் நான்கு திருவருட்பா திருமுறைகள் | : | 1867 |
| சத்திய தருமச்சாலை | : | 1867 |
| சித்திவளாகம் மேட்டுக்குப்பம் | : | 1870 முதல் |
| சுத்த சன்மார்க்க நெறி அறிவிப்பு | : | 12-4-1871 |
| சத்திய ஞான சபை | : | 25-1-1872 |
| சங்கத்திற்கு "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என்று பெயரிட்ட நாள் | : | 18-7-1872 |
| சுத்த சன்மார்க்க பாடல்கள் | : | 1871-1872 |
| கொடியை வெளிப்படுத்தி ஏற்றல் | : | 22-10-1873 |
| பெற்ற பெருவாழ்வில் வாழ்தல் | : | 1874 முதல் |

## வள்ளலாரின் முடிபான கொள்கையில் "உண்மை பொது நெறி"

வள்ளலாரின் முடிபான கொள்கையானது அவர்தம் முந்தைய கொள்கைக்கு முற்றிலும் மாறுப்பட்டது.

சமயத்தின் மீது வைத்திருந்த பற்றைகைவிட்டு விட்டு ஒரு புதிய வழியை கண்டு, அவ்வழிக்கு "சுத்த சன்மார்க்கம்" என்று பெயரிட்டு உலகிற்கு வெளிப்படுத்தினார்கள்.

- இளம்பருவத்தில் சமயப் பாடல்கள் பாடியதற்கு காரணம், தனக்கு அப்பொழுது "**கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது**" என்கிறார் வள்ளலார்.
- சத்திய அறிவால் அறியப்படுகின்றஉண்மைக் கடவுள் "ஒருவரே" என்பது அவர் கண்ட கடவுள் உண்மையாகும். தான் கண்ட கடவுள் உலகில் காணப்படும் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்றபலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல என திட்டவட்டமாக 12.04.1871ல் தன் அறிவிப்பின் மூலமாக உலகிற்கு அறிவித்துள்ளார்கள்.

நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களையும் உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாகியிருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளலார். மேலும் அவர் வெளிப்படுத்தியது யாதெனில்;

**'கருணை' என்றஒரே சாதனத்தால் மட்டுமே கடவுள் உண்மையறிந்து, இறையருள் பெற்று, பேரின்ப பெருவாழ்வாகிய மரணமில்லா பெருவாழ்வு கைகூடுவதாக உள்ளது.**

**அக்கருணை விருத்திக்கு தடையாக சாதி சமய கட்டுப்பாட்டு ஆசாரங்கள் உள்ளன. எனவே மேற்படி ஆசாரங்களை விட்டு ஒழித்து சத்திய ஞான ஆசாரமாகிய பொது நோக்கத்தை வருவித்துக் கொள்ள வேண்டும்.**

**நிற்க ! இதுவே வள்ளலார் கண்ட தனிநெறி.**

மேலும், இத்தனிநெறி எல்லா சமய மத மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக விளங்குகிறது என்கிறார் வள்ளலார். வள்ளலாரின் 'சுத்த சன்மார்க்கத்தை' கீழ்வருமாறு சுருங்கக் கூறலாம்.

1. சத்திய அறிவால் அறியப்படுகின்றஉண்மைக் **கடவுள் ஒருவரே.** அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்து மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

2. சுத்த சன்மார்க்கத்திற்கு எக்காலத்தும் முக்கிய தடைகளாகிய சமய மத மார்க்கங்களின் ஆசார சங்கற்ப விகற்பங்களிலும், வருணம், ஆசிரமம் முதலிய உலக **ஆசாரங்களிலும்** மனம் பற்றக்கூடாது.

3. கடவுள் நிலையறிவதற்கு **"ஒழுக்கம்"** நிரம்புதல் வேண்டும்.

4. இடைவிடாது, "கருணை" நன்முயற்சியில் பழகல் வேண்டும்.

5. கருணை என்பது எல்லா உயிர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்தில் அன்புமே. அக்கருணைக்கு **ஒருமை** வரவேண்டும்.

6. ஒருமை என்பது தனது **அறிவும், ஒழுக்கமும்** ஒத்த இடத்தில் தானே தோன்றுவது.

7. நம் அறிவு ஒழுக்கம் ஒத்தவர்களுடன் கூடியாவது, தனித் தனியாகவது அல்லது தனியாவது '**நல்ல விசாரணை**' செய்யுங்கள்.

8. சுத்த சன்மார்க்கத்தில் **அக அனுபவமே** உண்மை

9. சுத்தசன்மார்க்கத்தின் முடிபு **"சாகா கல்வியை"** தெரிவிப்பது அன்றி வேறு ஒன்றுமில்லை. (என் மார்க்கம் இறப்பை ஒழிக்கும் மார்க்கம் என்கிறார் வள்ளலார்).

10. **ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமையே** சுத்த சன்மார்க்கத்தின் லட்சியம். இத்தேகத்தைப் பெற்றஎல்லாச்சீவர்களுக்கும் எனக்கறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களையும் உரிமையுடைவர்களாக்கி வாழ்வித்தலே வேண்டும்.

*அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி*
*தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி*

சுத்தசன்மார்க்கத்திற்கு முக்கியத் தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களே சுத்தசன்மார்க்கத்துக்கு உரியவர்கள்.

- வள்ளலார்

## முடிபான கொள்கையில் வெளிவந்த நூல்களும் நிறுவிய நிலையங்களும்

**நூல்கள்:**

1. திருஅகவல்
2. திருஅட்டகம்
3. சுத்தசன்மார்க்கப் பாடல்கள் (ஆறாம் திருமுறை எனப் பெயரிட்டு இன்று அழைக்கப்படுகிறது)
4. சத்திய விண்ணப்பங்கள் நான்கு
5. 12.4.1871ல் சுத்த சன்மார்க்கக்கடவுளை வெளிப்படுத்திய அறிவிப்பு
6. அதன்பின்பு வெளியிட்ட அறிவிப்புகள், கட்டளைகள், விளம்பரம், விதிகள்.

(மேற்படியான அனைத்தும் திரு அருட்பிரகாச வள்ளலாரால் கைப்பட எழுதியவைகள்.)

மேலும், வள்ளலாரின் உபதேசங்களை அன்பர்களால் கேட்டு எழுதப் பெற்ற"உபதேசக் குறிப்புகள்". அதே போல் வள்ளலார் (1873ம் ஆண்டு) ஆற்றிய "மகாபேருபதேசம்" (மெய் அன்பரால் எழுதி வைக்கப்பட்டது.)

**நிலையங்கள்:**

- முடிபான கொள்கையின் அடிப்படையில் நிறுவப்பட்ட "சத்திய ஞான சபை" (பார்வதி புரம்)
- வள்ளலாரால் பெயரிடப்பட்ட சித்தி வளாகம். (மேட்டுக் குப்பம்)

➢ சுத்த சன்மார்க்கப் பெரும் பயனாகிய "தனி ஒளி வடிவம்" பெற்றஇடம் திரு அறை. (மேட்டுக்குப்பம்)

**வள்ளலாரின் முக்கிய சத்திய வாக்கியங்கள்:**

➢ தெய்வத்தை தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். (உரைநடை பக்கம் 471)

➢ பலவகைப்பட்ட சமய பேதங்களும் சாத்திர பேதங்களும், ஜாதிபேதங்களும் ஆசார பேதங்களும் போய் சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கம் இனி விளங்கும் (அறிவிப்பு நாள் 12.04.1871)

➢ இந்த சாலையால் எனக்கு மிகவும் சலிப்புண்டாகிறது. அந்த சலிப்பு இரண்டு பக்கத்திலும் உபத்திரவம் பண்ணும். ஆதலால் சாலையிலிருக்கிறவர்களெல்லாம் **"சுத்தசன்மார்க்கத்திற்கு ஒத்து வாயடங்கி மனமடங்கி இருக்க வேண்டும். என்மேற் பழியில்லை. சொல்லிவிட்டேன். பின்பு வந்ததைப்பட வேண்டும்"**.

➢ (அறிவிப்பு நாள் : கார்த்திகை மாதம் 1873) கார்த்திகை மாதத்தில் உள்ளிருந்த விளக்கைத் திருமாளிகைப் புறத்தில் வைத்து, வள்ளலார் சொன்னது;

"இதைத் தடைபடாது ஆராதியுங்கள். இந்தக்கதவைச் சாத்திவிடப் போகின்றேன். இனி கொஞ்சகாலம் எல்லோரும் ஆண்டவர் இப்போது தீப முன்னிலையில் விளங்குகின்றபடியால் உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்காமல், 'நினைந்து நினைந்து' என்னும் தொடக்கமுடைய 28 பாசுர மடங்கிய-பாடலிற் கண்டபடி தெய்வ பாவனையை

இந்தத் தீபத்தில் செய்யுங்கள். நானிப்போது இந்த உடம்பிலிருக்கின்றேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்".

- சத்திய பெரு விண்ணப்பத்தில்:- எல்லா உயிர்கட்கும் இன்பந் தருவதற்கு அகத்தும் புறத்தும் விளங்குகின்றஅருட்பெருஞ்ஜோதி உண்மை கடவுள் 'ஒருவரே' உள்ளார் என்றறிகின்றமெய்யறிவை விளக்குவித்தருளினீர். வாலிபப் பருவந் தோன்றிய போதே, சைவம், வைணவம், சமணம், பவுத்தமுதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களில் குறித்த சாதனங்களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவசித்தி விகற்பங்க ளென்றும் அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகளென்றும், உள்ளபடியே எனக்கு அறிவித்து அச்சமய ஆசாரங்களைச் சிறிதும் அனுட்டியாமற்றடை செய்வித்தருளினீர். அன்றியும் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க்க அனுபவ லேச சித்தி பேதங்களென்று அறிவித்து, அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித்தருளினீர்.

- சத்திய ஞான விண்ணப்பத்தில்:- இயற்கை விளக்கம் என்கின்றசத்திய ஞானசபைக்கண்ணே, இயற்கை உண்மை

என்கிறசத்தியத் திருவுருவினராய், இயற்கை இன்ப மென்கின்றசத்தியத் திருநடஞ் செய்தருள்கின்றஇயற்கைத் தனிப் பெருங் கருணைத் தனிப் பெரும்பதியாய் தனித் தலைமைக் கடவுளே!

- (உபதேசக்குறிப்பில் பக்கம் 418) தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன **சமய ஏற்பாடு ஜாதி ஏற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்,**

அவையாவன:

ஜாதி ஆசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமயாசாரம், மதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் **மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து,** சுத்த சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் **பொது நோக்கம் வந்தால்** ஒழிய தயவு விருத்தியாகாது. மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமே யல்லது, இல்லாவிடில் கூடாது.

**கடவுள் நிலையறிவது எப்படி எனில்**

- ஒழுக்கம் நிரம்பிக் கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்பம் உண்டானால், நாம் தாழுங்குணம் வரும். அத்தருணத்தில் திருவருட் சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடைவிடாது கருணை நன்முயற்சியில் பழகல் வேண்டும். (பக்கம் 438)
- சுத்த சன்மார்க்கத்துக்கு அனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்கு மேல்.

- சமாதிப் பழக்கம் பழக்கமல்ல. சகஜப் பழக்கமே சுத்தசன்மார்க்க பழக்கம்.

- **<u>30.01.1874ல் முடிபாக அறிவித்தது:-</u>**

திருக்கதவுதிருக்காப்பிடுவதற்கு முந்தின இரவில் வள்ளலார் அறிவித்தது;

**"இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சுத்தசன்மார்க்க ஒழுக்கம் இன்ன தென்று தெரிந்து கொள்ளவில்லை.".**

யாதெனில்;

**"இங்கிருக்கின்றஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்"** என்ற திருவார்த்தையதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக வுடையது கடமை.

**<u>கருத்தில் கொள்ள வேண்டியவை:-</u>**

- "இப்போது ஆண்டவர் என்னை ஏறா நிலைமேல் எற்றியிருக்கின்றார். ***எல்லாவற்றையும் விட்டு விட்டதினால்*** வந்த லாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டு விட்டீர்களானால் என்னைப் போல் பெரிய லாபத்தைப் பெறுவீர்கள்". — வள்ளலார்

வள்ளலார் அவர்கள் ஆரம்ப காலத்தில் சமயத்தில் பற்றுடன் இருந்தார்கள். அதன்பின்பு அவையில் வைத்திருந்த லட்சியத்தை கைவிட்டு விட்டு உண்மை பொது நெறியைக் கண்டார்கள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

- வள்ளலாரின் முதல் நான்கு திருமுறையில் உள்ள சமய ஸ்தோத்திர பாடல்கள் மற்றும் அச்சிடாமல் இருந்துவந்த வள்ளலாரின் முந்தைய சமய பாடல்களை தொகுத்து திருவேலாயுத முதலியாரால் வெளியிடப்பட்ட "ஐந்தாம் திருமறையில்" உள்ள **சமய ஸ்தோத்திரப் பாடல்களிலும் நாம் லட்சியம் வையாது**, சுத்த சன்மார்க்க பெருநெறி ஒழுக்கத்தில் மட்டுமே இடைவிடாது நன்முயற்சியில் பழகல் வேண்டும்.

| சன்மார்க்கங்கள் மூன்று | | |
|---|---|---|
| **சமய சன்மார்க்கம்** | **மத சன்மார்க்கம்** | **சுத்த சன்மார்க்கம்** |
| சத்துவண சம்பந்தமுடையது.<br><br>சத்போதம், சத்கர்மம், சத்சங்கம், சத்காலம், சத்விசாரம், சத்பாத்திரம், சற்குணம், சற்செய்கை<br><br>இதனியல்பாவன ; கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம் இந்திரிய நிக்கிரகம், ஜீவகாருண்யம். இவ்வண்ணம் வாச்சியாயனுபவம் பெற்று சொரூபானு பவமாகிய சாதனமே சமய சன்மார்க்கம். | நிர்க்குண வாட்சியம் செய்வது.<br><br>சோகம், சிவோகம், தத்வமசி, சிவத்துமசி, என்னும் வாக்கியத்தின் முக்கியானுபவம்.<br><br>தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல், புத்திரானாகப் பாவித்தல், சிநேகிதனைப் போல் பாவித்தல், தன்னைப் போலப் பாவித்தல் இவ்வாறே தான் கடவுளுக்கு அடிமையாதல், புத்திரானாதல், சிநேகனாதல், கடவுளே தானாதல். இதுவே மத சன்மார்க்க முடிவு. | மேற்குறித்த சமய மத அனுபவங்களை கடந்தது.<br><br>உண்மை அறிதல், ஆசாரங்களை ஒழித்தல், ஒழுக்கம் நிரப்புதல், தாமும் குணம் வருவித்தல், நல்ல விசாரணை,<br><br>சாகா கல்வி. ஆரூடராக நிற்றல், சுத்த தேகிகள், அகஅனுபவவே உண்மை |

# சுத்தசன்மார்க்க மரபு நான்கு

**வள்ளலார் பெற்ற சுத்தசன்மார்க்கத்திற்கு
கடவுள் குருவாக இருந்து உரைத்த
மரபு நான்கு :**

சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான் என அறிந்தஅறிவே
தகும்அறிவு மலம்ஐந்து வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம் எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே
தேகாதி மூன்றும்நான் தருமுன்அருள் செய்தெனைத்
தேற்றிஅருள் செய்தசிவமே
சிற்சபையின் நடுநின்ற ஒன்றான கடவுளே
தெய்வநட ராஜபதியே.

- நடராஜபதிமாலை

## வேண்டுகோள்

அன்பர்களே,

- திரு அருட்பிரகாச வள்ளலாரால் முற்றிலும் கைவிட்டு விடப்பட்ட சமயக் கொள்கையில் அவரை வெளிப்படுத்தும் அன்பர்களிடமும், நிலையங்களிடமும் மேற்படி உண்மையை எடுத்துச் செல்ல வேண்டும்.
- வள்ளலாரின் சுத்தசன்மார்க்கம் எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக உள்ளது. அதை நாம் உள்ளது உள்ளபடியாக அறிய வள்ளலாரின் விண்ணப்பங்கள் நான்கு மற்றும் 12.4.1871க்கு பின்பு வெளியிட்ட அழைப்புகள் அறிவிப்புகள் மற்றும் சுத்த சன்மார்க்கப் பாடல்கள் மூலம் தெளிவாக அறிந்து நல்ல விசாரணை செய்ய வேண்டும் என வேண்டுகிறேன் – ஆசிரியர்

மேலும்

- **வள்ளலார் கட்டளைப்படி**, ஒழுக்கத்தில் ஒழுகி,
- உள்ளமுந்தி,
- அதைச்சிந்தித்து,
- சிந்தித்தலே விசாரிக்க வேண்டும்.

**அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி**
**தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி**

தாழ்மையுடன் :

**ஏபிஜெ அருள்**

## ஆய்வுபகுதி

### முன்னுரை

அன்பர்களே !

வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் எந்தவொரு சமய, மத, மார்க்கத்தின் பிரிவு அல்ல. வள்ளலார் கண்ட கடவுள் எந்தவொரு சமய, மத மார்க்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள "கடவுள்" அல்ல. ஆரம்ப காலங்களில் வள்ளலார் சமயத்தில் பற்று வைத்திருந்தார். அதன்பின்பு அப்பற்றைமுற்றிலும் கைவிட்டுவிட்டு ஒரு புதிய மார்க்கத்தை கண்டார்கள்.

நிற்க! இந்த உண்மையை அறியாமையிலும் அஞ்ஞானத்திலும் மேலும் வல்லப தன்மையிலும் மறைத்து அன்பர்கள் சிலர் வள்ளலாரை சமயத்திலேயே தொடர்ந்து வெளிப்படுத்தி, மேலும் சமய சடங்குகளை நிலையங்களில் செய்தும் வருகிறார்கள். மேதகு நீதிமன்றங்களில் பல வழக்குகள் தாக்கல் செய்து, வள்ளலாரின் முடிபான நெறியை வெளிப்படுத்தி நிலைநாட்டினோம். உலகத்தார்கள் வள்ளலாரின் முடிபான நெறியை உள்ளது உள்ளபடி அறிய இந்த ஆய்வு பகுதி பயன்பெறும் என நம்புகிறேன்.

அன்புடன் சமர்ப்பிக்கும்
**ஏபிஜெ. அருள் (APJ. Arul)**

எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே ஏத்து !

- வள்ளலார்

கீழ்வரும் வள்ளலாரின் ஆவணங்கள்
ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.
அவையாவன :

| ஆவண எண் | ஆவணப் பெயர் |
|---|---|
| 1 | அறிவிப்பு நாள் 12-04-1871 |
| 2 | அறிவிப்பு நாள் 11-01-1872 |
| 3 | அறிவிப்பு நாள் 25-11-1872 |
| 4 | உரைநடைப்பகுதி |
| 5 | அறிவிப்பு நாள் 18-07-1872 |
| 6 | மகாபேருபதேசம் 22-10-1873 |
| 7 | சுத்த சன் மார்க்க சத்திய சிறு விண்ணப்பம் |
| 8 | சமரச சன்மார்க்க சத்திய பெரு விண்ணப்பம் |
| 9 | அருட்பெருஞ்ஜோதி அகவல் |
| 10 | 28 பாசுரப்பாடல்கள் |
| 11 | சுத்த சன்மார்க்கப்பாடல்கள் |

**குறிப்பு :**

மேற்படி ஆவணங்களில் உரைநடைப்பகுதி மற்றும் மகாபேருபதேசம் தவிர மற்ற அனைத்தும் வள்ளலாரால் கைப்பட எழுதிய நேரடி ஆவணங்கள் ஆகும். உரைநடைப்பகுதி மற்றும் மகாபேருபதேசம் அன்பர்களால் எழுதப்பெற்றவை அவைகள் அனைத்தும் வள்ளலாரின் முடிபான கொள்கை அடிப்படையில் உள்ளது.

சுத்தசன்மார்க்கப் பாடல்கள் (ஆறாம் திருமுறை) வள்ளலாராலேயே ஆண்டவர் முன்பு அரங்கேற்றப்பட்டது. (பாடல் எண். 1251)

**"தன் முன் அரங் கேற்றெனவே தான் உரைத்தான்..."**

பகுதி-1 PART-I

## (அ) வள்ளலார் கண்ட கடவுள்

உலகத்தார்களை, 1. கடவுள் நம்பிக்கை உடையவர்கள் 2. கடவுள் என்று ஒன்றும் கிடையாது என்று கூறி அதன் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் (மற்றும்) 3. கண்ணால் காணமுடியாத கடவுள் பற்றிய சிந்தனை தேவையில்லை ஆனால் கண்ணால் காணும் ஏற்றதாழ்வுகளைப் பற்றிய சிந்தனை உடையவர்கள் எனப் பொதுவாக மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

வள்ளலார் "கடவுள் நம்பிக்கை" உடையவர்களில் வருகிறார். கடவுள் நம்பிக்கையில் பல்வகை சமய மத மார்க்கங்கள் இன்று உள்ளது. கடவுள் யார்? என்றமுக்கிய அடிப்படையிலேயே அவைகள் வேறுபட்டு விளங்குகிறது. வள்ளலார் தன் மார்க்கத்தில் தாம் கண்ட 'கடவுள்' யார்? என்று தனது அறிக்கை 12-04-1871ல் (ஆவண எண்.1) வியம்பும் போது.

**"இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச் சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுளர், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல. இப்படிச் சொல்லப்பட்ட எல்லா மூர்த்திகளும், எல்லாத் தேவர்களும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா கடவுளரும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்றதனித்தலைமைப் பெரும்பதி" என்கிறார்கள்.**

## (ஆ) வள்ளலாரின் மார்க்கம்

வள்ளலார் தாம் கண்ட மார்க்கத்திற்கு "சமரச சுத்த சன்மார்க்கம்" என்று பெயரிட்டுள்ளார்கள் என்பதை அறிவிப்புகள் நாள் 11.01.1872 (ஆவண எண்2) மற்றும் 25.11.1872 (ஆவண எண் 3ல்) மூலம் அறியலாம். மேற்படி பெயரிடப்பட்ட சுத்த சன்மார்க்கத்திற்கு பொருள் என்ன என்பதை வள்ளலார் உரை நடைப்பகுதியில் (ஆவண எண். 4ல்) சொல்லும் பொழுது;

**"சன் மார்க்கம் சிவ சன்மார்க்கம் இரண்டையும் மறுத்தது சுத்த சன்மார்க்கம். பூர்வத்தில் நின்றசமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். இதன் பொருட்டு ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க மென்றேமருவியது. ஒருவாறு ஷடாந்தங்களின் பொதுவாகிய ஷடாந்த சன்மார்க்கம் ஒன்று, இதன் பூர்வத்தில் சமரச சன்மார்க்கம் ஒன்று, இதன் உத்தரத்தில் சுத்த சன்மார்க்கம் ஒன்று: ஆதலால் ஷடாந்த சமரசம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அது போல் சுத்த சன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம். (அந்நியமல்ல) என்கிறார்கள்".**

அறிவிப்பு 18-07-1872ல் (ஆவணம் எண்.5) சங்கத்திற்கு "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கமென்று" வழங்குதல் வேண்டும் என்கிறார்கள்.

## (இ) வள்ளலார் குறிப்பிடும் "சுத்தசிவம்"

உரைநடைப்பகுதி (ஆவண எண்.4) பக்கம் 402ல் வள்ளலார் குறிப்பிட்டு உள்ளது யாதெனில்;

சமரசம் என்பதற்குப் பொருள்- "எல்லா அந்தங்களினது அந்தமும் தனக்குப் பூர்வமாக்கித் தான் உத்திரத்தினின்று மருவியது சமரசம். இதற்கு அனுபவம் குருதுரிய ஸ்தானம்".

சுத்த சமரச மென்பதற்கு நியாயம்; "விந்து பரவிந்து இரண்டையும் மறுக்கச் சுத்தவிந்து வந்தது போலும், **சிவம் பரசிவம் இரண்டையும் மறுத்தது சுத்த சிவம் போலும்**".

## ஒருவாறு முடிபான முடிபு

**வள்ளலார் தனது அறிவிப்புகள் மற்றும் அவரின் உபசேக் குறிப்புகள் (ஆவணங்கள் எண்கள் 1 முதல் 5) மூலம் வெளிப்பட்டிருப்பதை பார்க்கும் பொழுது கீழ்வருபவையே ஒருவாறு தீர்மானிக்க முடிகிறது.**

**1. தனி கடவுள்.**

தான் கண்ட கடவுள் (கடவுள் உண்மை) உலகில் காணும் எந்தொரு சமய, மத மார்க்கங்களில் வெளிப்படுத்தப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுள், தேவர் அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல என்றதின் மூலம் சுத்த சன்மார்க்கக் கடவுள் "தனி கடவுள்" என அறிய முடிகிறது.

**2. தனி வழி**

மேற்படி வெளிப்படுத்தப்பட்ட கடவுளின் "அருள்" பெறுவதற்கு கண்ட வழியும் (மார்க்கமும்) "தனி வழி"யாக உள்ளது.

**3. வெளிப்படுத்தப்பட்ட ஆண்டு**

மேற்படி சுத்தசன்மார்க்கத்தையும் அம்மார்க்கக் கடவுளையும் வெளிஉலகத்தார்க்கு 12-04-1871ல் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

## பகுதி-2 PART-II

மேற்படி பகுதி 1ன் அடிப்படையில் எழுப்பப்பட வேண்டிய கேள்விகள் கீழ்வருமாறு. இவைகுறித்து இப்பகுதியில் காண்போம்.

1. வள்ளலாரால் வெளிப்படுத்தப்பட்ட சுத்த சன்மார்க்கம், கண்ட கடவுள், இவை அவர்தம் முந்தைய சமய நம்பிக்கைக்கு முற்றிலும் மாறானதாக உள்ளதா?

2. முன்பு பற்று வைத்திருந்த சமயம் குறித்து வள்ளலார் ஏதேனும் கருத்து தெரிவித்திருந்தாரா?

3. முந்தைய சமயப் பற்றினை எக்காலத்தில் முற்றிலும் கைவிட்டுவிட்டு சுத்த சன்மார்க்கத்தை வெளிப்படுத்தினார்?

4. இவைக்கான ஆதாரங்கள் என்ன?

### கேள்வி-1

**1. வள்ளலாரால் வெளிப்படுத்தப்பட்ட சுத்த சன்மார்க்கம், கண்ட கடவுள், இவை அவர்தம் முந்தைய சமய நம்பிக்கைக்கு முற்றிலும் மாறானதாக உள்ளதா?**

வள்ளலார் தனது மகா பேருபதேசத்தில் (22-10-1873) (ஆவண எண்.6) பக்கம் 466ல்

**நாம் நாமும் முன் பார்த்தும் கேட்டும் லக்ஷயம் வைத்துக்கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் லக்ஷியம் வைக்கவேண்டாம். ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூ உக்குறி யன்றித் தெய்வத்தை இன்னபடி என்றும், தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும், கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல், மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள்.**

மேலும் பக்கம் 468-ல்

**"சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண்டாம். அவற்றில் தெய்வத்தைப் பற்றிக் குழுஉக் குறியாக குறித்திருக்கின்றதே அன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை. அவ்வாறு பயிலுவோமேயானால் நமக்கு காலமில்லை. ஆதலால் அவற்றில் லட்சியம் வைக்கவேண்டாம். ஏனெனில், அவைகளிலும், அவ் வச்சமய மதங்களிலும் அற்பப் பிரயோஜனம் பெற்றுக் கொள்ளக் கூடுமே யல்லது, ஒப்பற்றபெரிய வாழ்வாகிய இயற்கையுண்மை என்னும் ஆன்மானுபவத்தைப்பெற்று கொள்கின்றதற்கு முடியாது. ஏனெனில் நமக்கு காலமில்லை."**

வள்ளலாரின் பேருபதேசக் குறிப்புகள் அனைத்தும் அன்பர்களின் குறிப்புகள் ஆகும். "வள்ளலாரின் சொந்த கையெழுத்து பிரதியான "சுத்த சமரச சன்மார்க்க சத்திய சிறு விண்ணப்பத்தில்" (ஆவண எண்.7)ல் உள்ளது யாதெனில்;

**"எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே, இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள், என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்திற்பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்திலும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல்**

**வேண்டும். எல்லாமாகிய தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி யாண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!".**

மேலும், அவர்தம் சொந்த கையெழுத்து பிரதியாக உள்ள மற்றொரு ஆவணமாகிய சமரச சுத்த சன்மார்க்க சத்திய பெரு விண்ணப்பத்தில் (ஆவண எண்-8) பக்கம் எண் 570ல் வள்ளலார் எழுதியுள்ளது யாதெனில்;

"அவ்வாபலிப் பருவந் தோன்றுவதற்கு முன்னரே, எல்லா உயிர்கட்கும் இன்பந் தருவதற்கு அகத்தும் புறத்தும் விளங்குகின்றஅருட்பெருஞ்ஜோதி உண்மைக் கடவுள் 'ஒருவரே' உள்ளார் என்றறிகின்றமெய்யறிவை விளங்குவித் தருளினீர்.

வாலிபப் பருவந் தோன்றியபோதே, சைவம், வைணவம், சமணம், பவுத்த முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும், அச்சமயங்களிற் குறித்த சாதனங்களும், தெய்வங்களும், கதிகளும், தத்துவசித்தி விகற்பங்க ளென்றும் அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைகள் என்றும், உள்ளபடியே எனக்கு அறிவித்து அச்சமயாசாரங்களைச் சிறிதும் அனுட்டியா மற்றடைசெய்வித்தருளினீர் அன்றியும் வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க்க அனுபவ லேச சித்தி பேதங்களென்று அறிவித்து, அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித் தருளினீர்".

மேலும் வள்ளலார் கைப்பட எழுதி வெளியிட்ட அறிவிப்பில் சத்திய ஞான சபை விளம்பரம் நாள் 25-11-1872 (பக்கம் 549) (ஆவண எண் 3) உள்ளது யாதெனில்;

**"ஒருவரேயாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல வேறு கற்பனைகளாற் பலவேறு சமயங்களிலும் பலவேறு மதங்களிலும் பலவேறு மார்க்கங்களிலும் பலவேறு லட்சியங்களைக் கொண்டு நெடுங்காலமும் பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்காளாகிச் சிற்றறிவு மின்றி விரைந்து விரைந்து பலவேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண் போகின்றார்கள்".**

ஆக, வள்ளலார் தனது மார்க்கத்தை உலகில் காணும் எந்தொரு சமய, மத, மார்க்கங்களில் இணைத்துக்கொள்ள வில்லை. எவை கீழும் இருப்பதாக அறிவிக்கவில்லை.

இது விஷயமாக வள்ளலார் மிகத்தெளிவாகவும் உறுதியாகவும் தனது உபதேசத்தில் (பக்கம் எண் 411) (ஆவண எண். 4 ) குறிப்பிட்டது யாதெனில்;

**"சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடைகளாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமகுரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள்" என்கிறார்கள்.**

ஆக, பதில் காண வேண்டிய முதல் கேள்வியானது; "வள்ளலார் கண்ட கடவுள், வெளிப்படுத்தப்பட்ட சுத்த சன்மார்க்கம் ஆகிய இவை அவர்தம் முந்தைய சமய நம்பிக்கைக்கு முற்றிலும் மாறானதாக உள்ளதா?" என்பதற்கு மேற்படி கண்ட ஆதார ஆய்விருந்து தீர்வாக கிடைப்பது யாதெனில்;

## ஒருவாறு முடிபான முடிபு

வள்ளலாரின் மார்க்கமும் அவர் கண்ட கடவுளும் உலகில் காணும் சமய, மத மார்க்கங்களிருந்து முற்றிலும் மாறானதாகவே காட்டுகிறார். அவர் கண்டநெறி தனி நெறியாகவும் தனி மார்க்கமாகவும் (வழியாகவும்) உள்ளது.

## கேள்வி-2

**முன்பு பற்று வைத்திருந்த சமயம் குறித்து வள்ளலார் ஏதேனும் கருத்து தெரிவித்திருந்தாரா?**

இதற்கு மிக முக்கியமாக இங்கு காணவேண்டியது எதுவெனில்; (வள்ளலார் மகா பேருபதேசத்தில் (ஆவண எண் 6) சொன்னது:-

***நான் அப்படி அந்தச் சமயத்தில் வைத்திருந்த லட்சியமே என்னை இந்த நிலையில் தூக்கி விட்டது என்றாலோ,***

***அந்த லட்சியம் தூக்கி விடவில்லை.***

வள்ளலார் இங்ஙனம் சொல்லியதின் மூலம் அவர் கண்ட தனி மார்க்க நெறியை எல்லாராலும் நேரிடையாகவே தெரிந்துக் கொள்ள முடியும் என்பது தெரிய வருகிறது.

இங்கு நம்மிடம் எழும் மற்றொரு கேள்வி யாதெனில்;

வள்ளலார் சமயத்தில் பற்றுக் கொண்டிருக்கும் போது இயற்றப்பட்ட திரு அருட்பாவில் உள்ள சமய ஸ்தோத்திரப் பாடல்கள் பற்றி என்னச் சொன்னார்கள்?

இதற்கான பதிலை அவரே தனது மகாபேருபதேசத்தில் (ஆவண எண்.6) சொல்லியுள்ளார்கள்;

**"நான் முதலில் சைவ சமயத்தில் லட்சியம் வைத்துக் கொண்டிருப்பது இவ்வளவு என்று அளவு சொல்ல முடியாது அந்த லட்சியம் இப்போது எப்படிப் போய்விட்டது பார்த்தீர்களா" அப்படி லட்சியம் வைத்ததற்குச் சாட்சிவேறேவேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற திருவருட்பாவில் அடங்கி யிருக்கிற ஸ்தோத்திரங்களே போதும், அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டுவந்தால், அவைகளே சாட்சி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்தது என்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது". என்கிறார் வள்ளலார்.**

முடிபான நெறியை அடிப்படையாகக் கொண்டு வள்ளலாரால் கைப்பட எழுதிய ஆயிரக்கணக்கான பாடல்களின் தொகுப்பே "ஆறாவது திருமுறை" (ஆவண எண் 11). அவையில் சமயம், மத மார்க்க நெறிகளை மறுத்து சாடியுள்ளதைக் காணலாம். (சில பாடல்கள் நூலின் முடிவில் தரப்பட்டுள்ளது).

## ஒருவாறு முடிபான முடிபு

தனது முந்தைய சமயப்பற்றினை குறித்து தெளிவாகக் கூறி, அதன் மீது லட்சியத்தைக் கைவிட்டுவிட்டதாக தெளிவாக வள்ளலார் குறிப்பிட்டு உள்ளார்கள்.

### கேள்வி-3

**முந்தைய சமயப் பற்றினை முற்றிலும் கைவிட்டு விட்டு சுத்த சன்மார்க்கத்தை எக்காலத்தில் வெளிபடுத்தினார்கள்?**

**இவைக்கான ஆதாரங்கள் என்ன?**

இதற்கு முதல் ஒன்றைகண்டுபிடித்து அறிய வேண்டும். அது எக்காலத்தில் வள்ளலார் தாம் வைத்திருந்த சமயப்பற்றினை முற்றிலும் கைவிட்டு விட்டதாக அறிவித்து சுத்த சன்மார்க்கத்தை உலகிற்கு வெளிபடுத்தினார்கள்?

மேற்படி காலத்தினை தெரிந்து கொள்ள ஆதாரமாக வள்ளலாரின் பேருபதேசமும், (ஆவண எண் 6) அவர் வெளியிட்ட அறிவிப்பு நாள் : 12-04-1871 (ஆவண எண் 1) இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ள முடிகிறது.

**மகாபேருபதேசத்தில், (ஆவண எண் 6) இரண்டரை வருஷமாக நான் சொல்லிக்கொண்டு வந்தேன். இனிச் சொல்பவர்கள் சில நாள் தடைப்பட்டிருப்பார்கள் என்கிறார்கள்.**

| | நாள் | மாதம் | வருடம் |
|---|---|---|---|
| பேருபதேசம் ஆற்றியநாள் | 22- | 10- | 1873 |
| இதிலிருந்து 2½ வருடம் கழித்தால் | 0- | 6- | 2 |
| வரும் மாதம் வருடம் | | 4- | 1871 |

(ஏப்ரல் 1871 என வருகிறது)

மேற்படி ஏப்ரல் 1871ல் வள்ளலார் ஏதேனும் கடிதம், அறிவிப்பு உள்ளதா?, எனப் பார்க்கும் போது அவர் வெளியிட்ட அறிவிப்பு (12-04-1871) உள்ளது. அதில்:

**"சுத்த சிவ சன்மார்க்கம் ஒன்றேஎல்லா உலகத்தும் வழங்கும் இதற்கு எவ்விதப்பட்ட தடைகளும் இல்லை. தடையற்றபெருநெறி வழக்கம் இக்காலந் தொட்டு அளவிறந்த நெடுங்கால வரையில் வழங்கும். அதன் மேலும் வழங்கும். பலவகைப்பட்ட சமய பேதங்களும் சாத்திர பேதங்களும், ஜாதிபேதங்களும், ஆசாரபேதங்களும் போய், சுத்தசன்மார்க்கப் பெருநெறி யொழுக்கம் விளங்கும். அது கடவுள் சம்மதம். இது 29 மாதத்திற்குமேல்"** என மேற்படி அறிவிப்பில் உள்ளது.

மேற்படி 29 மாதத்திற்கு மேல் என்பது 2 வருடம் 5 மாதம் ஆகும். இந்த 2 வருடம் 5 மாதத்திற்கு மேல் தான் வள்ளலார் மேற்படி மகாபேருபதேசம் அக்டோபர் 1872ல் நிகழ்த்தியுள்ளார்கள்.

அறிவிப்பு 12-04-1871 மூலம்;

- சுத்த சன்மார்க்கத்தின் முடிவான பயனாகிய "மரணமில்லா பெருவாழ்வை" வள்ளலார் (30.01.1874ல்) உலகிற்கு வெளிப்படுத்த போவதையும் அறியலாம்.
- மேலும் 12.04.1871 முதல் 30.01.1874 வரை வள்ளலார் தன் மார்க்கத்தின் நெறியை உலகிற்கு விளக்கி அனைவரும் தன்போல் சுத்தசன்மார்க்கப்பயன் பெறவேண்டும் என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையில் இருந்துள்ளார் எனவும் அறியலாம்.

- இதை மேலும் உறுதிபடுத்த வேண்டுமானால் மேற்படி 12.04.1871க்கு பின்பு வெளியான அறிவிப்புகள், எழுதிய விண்ணப்பங்கள், கடிதங்கள், பாடல்கள் அனைத்துமே அவர்தம் முடிபான நெறியையே வெளிப்படுத்துகிறது. முடிபான கொள்கையை வெளிப்படுத்தும். "திருஅகவல்" மற்றும் தோற்றுவித்த "சத்திய ஞான சபை" இவை இரண்டின் வருடம் 1872 ஆகும்.

## வள்ளலாரின் வாலிப பருவம்

"ஏப்ரல் 1871" வள்ளலாரின் முடிவான நெறி வெளிப்படுத்தப்பட்ட காலமாக கொள்ளலாம் என மேலே கண்டோம். ஆனால் தனது விண்ணப்பத்தில் (ஆவண எண் 7) வள்ளலார் குறிப்பிட்டிருப்பது;

"வாலிப பருவத்தில் சமய ஆசாரங்களை சிறிதும் அனுட்டியாதபடி தடைசெய்வித்தருளினீர்."

மேலும், "பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க்க அனுபவலேச சித்தி பேதங்களென்று அறிவித்து, அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித்தருளினீர்", என்கிறார்கள்

ஆம்,

12-04-1871க்கு முன்பான காலங்களில் வள்ளலார் சமயத்தில் பற்று வைத்து இருந்தாலும், அந்த சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களை அனுட்டிகாமலே இருந்து உள்ளார்கள். அச்சமயத்தில் இருந்து கொண்டிருக்கும் போது கடவுள் உண்மைப் பற்றி “நல்ல விசாரணையை” தொடர்ந்து

மேற்கொண்டு வந்துள்ளார் என்பது தெரியவருகிறது. ஆனாலும் சுத்த சன்மார்க்க கடவுள் பற்றியும், மார்க்கத்தையும் உலகிற்கு ஏப்ரல் 1871ல் தான் முழுமையாக வெளிப்படுத்தினார்கள்.

ஆக, மேற்படி கேள்விக்கு (3க்கு) வள்ளலாரின் நேரிடையான ஆவணங்கள் மூலம் வள்ளலார் தனது முந்தைய சமயப்பற்றினை கைவிட்டுவிட்டு ஒரு உண்மை பொது நெறியை கண்டார் என தெளிவாக தெரிகிறது. தனது "தனிநெறி" 12-04-1871ல் அறிவிப்பின் மூலம் உலகிற்கு முழுமையாக வெளிப்படுத்துகிறார்கள்.

## ஒருவாறு முடிபான முடிபு

மேற்படி அறிவிப்பில் தான், சுத்த சன்மார்க்கத்தை, வள்ளலார் உலகிற்கு வெளிப்படுத்தி உள்ளார்கள். "***இனி சுத்த சன்மார்க்கம் விளங்கும்***" என்றதின் மூலம் வள்ளலார் ஒரு தனி நெறியை ஏப்ரல் 1871ல் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார் என அறியலாம்.

## பகுதி-3
## PART-III

இப்பகுதியில் சுத்த சன்மார்க்கத்தின் கடவுள், கடவுள் நிலை குறித்து காண்போம்.

- ***வள்ளலார் மார்க்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள "கடவுள்"***

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சிறு விண்ணப்பத்தில் (ஆவண எண் 7) கடவுள் பற்றி 6வது பாராவில்;

"எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும், எல்லா பொருள்களையும, மற்றையெல்லாவற்றையும் தோற்றுவித்தும், விளக்கம்

செய்வித்தும், துரிசு நீக்குவித்தும், பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும், எங்கும் பூரணமாகி விளங்குகின்றஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும் அக்கடவுளை உண்மையன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்றும், அத்திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதய அவத்தைக்ளெல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந்தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வையடைதல் கூடுமென்றும், எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட வுணர்த்தியருளப் பெற்றோம்”

**வள்ளலார், தன் சத்திய அறிவில் ஞான யோக அனுபவ நிலையில் கண்ட கடவுள் உலகில் காணும் சமய, மத மார்க்கங்களில் வந்ததாகச் சொல்லுகின்றபலவகைப்பட்ட ஏற்பாடு கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுள், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல என்கிறார்.**

மேலும் 12-04-1871 அறிவிப்பில் சொன்னது; (ஆவண எண்.1)

“இப்படி சொல்லப்பட்ட எல்லாக்கடவுளரும், எல்லாத் தலைவர்களும், எல்லா யோகிகளும், எல்லா ஞானிகளும் தங்கள் தங்கள் அனுபவங்களைக் குறித்து எதிர்பார்க்கின்றபடி எழுந்தருளுகின்றதனித்தலைமைப் பெரும்பதி, இது உண்மையாயின் அந்தப் பதியின் அருளை நான் பெறுவேன். பெறுகின்றேன். பெற்றேன். என்னை யடுத்த தாங்களும் பெறுவதற்கு யாதொரு தடையுமில்லை. பெறுவீர்கள்,

பெறுகின்றீர்கள், பெற்றீர்கள், அஞ்சவேண்டாம்".

தனது "திரு அகவல்" (ஆவண எண் 9) தன் மார்க்கக் கடவுள் நிலைகள் பற்றி மிகத் தெளிவாக வரையறுத்துள்ளார்கள். மேலும் தனது கைப்பட எழுதியிருக்கும் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய பெருவிண்ணப்பத்தில் (ஆவண எண் 8)

மேலும், குறிப்பிட்டது;

"இயற்கை உண்மையரென்றும், இயற்கை அறிவினரென்றும், இயற்கை இன்பின ரென்றும், நிர்க்குணரென்றும், சிற்குணரென்றும், நித்தியரென்றும், சத்தியரென்றும், ஏக ரென்றும், அமல ரென்றும், அருட்பெருஞ்ஜோதிய ரென்றும், அற்புத ரென்றும், நிரதிசய ரென்றும், எல்லாமானவ ரென்றும், எல்லா முடையவரென்றும், எல்லா வல்லவரென்றும், குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தைகளால் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும், உணர்ந்தும், புணர்ந்தும், அனுபவிக்க விளங்குகின்றதனித் தலைமைப் பெரும் பதியாகிய **பெருங் கருணைக் கடவுளே!** தேவரீர் திருவருட் சமுகத்தில் துரும்பினுஞ் சிறியேமாகிய யாங்கள் சிற்றறிவாற் செய்துகொள்ளும் சிறு விண்ணப்பங்களைத் திருச்செவிக் கேற் பித்தருளியெங்களை இரட்சித்தருளல் வேண்டும்".

ஆக, வள்ளலார், தனது மார்க்கத்தில் கடவுளை "பெருங்கருணை" என்று பெயரிட்டு அழைக்கிறார். அக்கடவுளின் சொரூபம் அருட்பெருஞ்ஜோதி என்று, வெளிப்படுத்தியுள்ளார்கள்.

## கடவுள் நிலைகள் பற்றி முழுமையாக அறிதல்

வள்ளலார் அவர்தம் அனுபவத்தில் கண்ட கடவுளின் நிலைகள் பற்றி பாடல்கள் மற்றும் உபதேசத்தில் சொன்னாலும், இவைகள் (கடவுள் நிலைகள்) **படிப்பால் அறியக்கூடாது (முடியாது)** என்கிறார். மேலும் உரைநடைப்பகுதியில் (பக்கம் 437; ஆவண எண் 4):-

"*ஒழுக்கம்*" நிரம்பி, கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்பம் உண்டானால், நாம் தாழுங் குணம் வரும். அத்தருணத்தில் திருவருட் சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால் இடைவிடாது கருணை நன் முயற்சியில் பழகல் வேண்டும்" என்கிறார்கள்.

மேலே சொன்னதின் மூலம், சுத்தசன் மார்க்கத்தில் "ஒழுக்கம் நிரப்பிக்கொள்வதில்தான்" கடவுள் நிலையறிய முடியும் எனத் தெளிவாக அறியமுடிகிறது.

'**ஒழுக்கம்**' என்னவென்று வள்ளலார் ஏப்ரல் 1871க்கு பின்பு சொல்லியுள்ளார்களா எனப் பார்க்கும் போது 11.01.1872ல் வெளியிட்ட அறிவிப்பில் இது பற்றி காண முடிகிறது.

"இதில் வாசிக்க விரும்புகின்றவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகி, நல்லறிவு, கடவுள்பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களையும், உண்மையுரைத்தல், இன் சொல்லாடல், உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று, சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாகியிருத்தல் வேண்டும்"

நிற்க! இங்கு சொல்லப்பட்ட 'ஒழுக்கங்கள்' பொதுவாக எல்லா ஞானி, யோகிகளால் ஏற்கனவே கண்டறியப்பட்டவை,

போதிக்கப்பட்டவை. சமயமத மார்க்கங்களில் உள்ளவை. இந்நிலையில் வேறு ஏதேனும் வள்ளலார் சிறப்பாக தனியாக சொல்யுள்ளார்களா? என இங்கு நாம் கண்டறியவேண்டும்.

அங்ஙனம் ஏதேனும் சொல்லப்பட்டியிருந்தால் மட்டுமே வள்ளலார் கண்ட மார்க்கம் ஒரு தனி மார்க்கமாக கருத முடியும். ஏனென்றால் இவரின் தனி நெறியை வெளிப்படுத்தும் வழியும் புதியதாகவே இருக்க வேண்டும்.

ஆம், வள்ளலார் "சுத்த சன்மார்க்க ஒழுக்கம்" என தனியாகவே ஓரிடத்தில் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்கள். உரைநடைப்பகுதி (ஆவண எண்.4, பக்கம் 410ல்) திருக்கதவு திருக்காப்பிடுவதற்கு முந்தின இரவில் (30.01.1874) வள்ளலார் குறிப்பிட்டது;

**'இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் (சுத்த) சன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை.**

**யாதெனில்:**

**இங்கிருக்கின்றஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள் என்ற திருவார்த்தை அதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக வுடையது கடமை"**

பொதுவான ஒழுக்கங்களைத் தன்மார்க்கத்திற்கு அடிப் படையான தகுதிகளாக வைக்கிறார் வள்ளலார் என அறிய முடிகிறது.

எனவே சுத்தசன்மார்க்கத்தில் "அடிப்படை தகுதி ஒழுக்கங்கள்" எனவும், "சுத்த சன்மார்க்க ஒழுக்கம்" எனவும் வள்ளலார் மிகத் தெளிவாக குறிப்பிட்டு உள்ளதை இங்கு உறுதி

செய்யமுடிகிறது. ஆக, ஒழுக்கம் நிரம்பிய பின்பே கடவுள் நிலையறிய முடியும்.

இதன் மூலம் வள்ளலார் ஒரு தனி வழியை (மார்க்கத்தை) கண்டு வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பது தெளிவாகுகிறது.

## மார்க்கத்தின் சாதனம்

இம்மார்க்கத்தின் ஒரே சாதனம் "கருணை" என்கிறார் வள்ளலார். இந்த கருணை விருத்திக்கு சாதி, சமய, கட்டுப்பாட்டு ஆசாரங்கள் தடையாக உள்ளது என்பதே வள்ளலார் கண்ட உண்மையாகும். இதுவே வள்ளலாரின் தனிநெறியின் மிக முக்கியப்பகுதி ஆகும்.

**"ஆசார வகைகளை ஒழித்தல்"**

வள்ளலார் மிகத் தெளிவாக பக்கம் 418ல் கீழ்வருமாறு குறிப்பிட்டு சொல்யுள்ளார்கள்; "தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு, ஜாதிஏற்பாடு முதலிய கட்டுப்பாடு ஆசாரங்கள்."

அவையாவன;

"ஜாதி ஆசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம், தேசாசாரம், கிரியாசாரம், சமய ஆசாரம், மத ஆசாரம், மரபு ஆசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம் முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமே யல்லது, இல்லாவிடில் கூடாது" என்கிறார் வள்ளலார்.

மேலும் வள்ளலாரின் சொந்த கையெழுத்து பிரதியாக கிடைத்துள்ள மிக முக்கிய ஆவணங்களாவன;

1. சமரச சுத்த சன்மார்க்க சத்திய சிறு விண்ணப்பம் (ஆவண எண்.7)

2. சமரச சத்த சன்மார்க்க சத்திய பெரு விண்ணப்பம் (ஆவண எண்.8)

மேற்படி ஆவண எண் 7ல், "எல்லாமுடைய அருட் பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள், என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்விருத்தருளல் வேண்டும்" என்கிறார் வள்ளலார்.

இங்கு ஆசாரம் என்பது According to Sastra சங்கற்ப விகற்பங்கள் என்பது Rituals உலகாசாரம் என்பது World customs ஆகும்.

"ஆசார சங்கற்ப விகற்பங்கள்" என்பது-சாஸ்திரப்படியான மனோநிச்சய மற்றும் வேறுபாடான சடங்குகள் எனப்படும். இவை எதுவும் நம் மனதில் பற்றக்கூடாது என்கிறார் வள்ளலார்.

மேலும், உலகில் காணப்படும் வழக்கங்களாவன; (உலக ஆசார சங்கற்ப விகற்பங்கள் எனப்படுவது);

(i) <u>வருணம்:</u> நிறம், ஜாதி, இன, குல, துதி இவையால் உள்ள வேறுபாடு மற்றும் பழக்க வழக்கங்கள்.

(ii)<u>ஆசிரமம்:</u> (வாழ்க்கை நிலைகள்). பிரமசரியம், கிருகஸ்தம், வனப்பிரதஸ்தம், சன்னியாசம் ஆகிய வாழ்க்கை நிலைகளின் சங்கற்ப விகற்பங்கள்.

இவையாவும் சுத்த சன்மார்க்கத்தார் மனதில் பற்றாவண்ணம் இருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளலார்.

<u>இந்நிலையில் நம்மிடம் எழும் கேள்வி;</u>

வள்ளலார் மார்க்கத்தில் எந்த பழக்கம் தான் கடைபிடிக்கப்படுகிறது? என்பதே. அதற்கு வள்ளலார் அவர்களே பதில் தருகிறார்கள் (பக்கம் 438)ல் அது;

**'சமாதி பழக்கம் பழக்கமல்ல.**

**சகஜ பழக்கமே என்மார்க்கத்தின் பழக்கம்'.**

(ஆவண எண்.4 பக்கம் 416) வள்ளலார் எழுதியது; சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய சாதனம் என்னவென்றால்; "எல்லா ஜீவர்களிடத்தும் தயவும், ஆண்டவரிடத்து அன்புமே" மேலும் வள்ளலார் குறிப்பிட்டது; தன்னை ஏறாநிலை மிசை ஏற்றிவிட்டது யாதெனில்; தயவு, தயவு என்னுங் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது. அந்தத் தயவுக்கு ஒருமை வரவேண்டும். அந்த ஒருமையில் தான் தயவு வரும். தயவு வந்தால் தான் பெரிய நிலைமேல் ஏறலாம். இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது. அது அந்த ஒருமையினாலேதான் வந்தது. நீங்களும் என்னைப்போல் ஒருமையுடனிருங்கள்." என்கிறார்கள்.

நிற்க!

இங்கு குறிப்பிட்டுள்ள "ஒருமை" மூலமும் வள்ளலாரின் தனிநெறியை உறுதிபடுத்தலாம்.

## ஒருமை

சுத்த சன்மார்க்க சாதனமாகிய தயவுக்கு ஒருமை வேண்டும் என்கிறார் வள்ளலார். "ஒருமை" இருந்தால் தான் தயவு வரும் (பக்கம் 470) என்கிறார்கள்.

ஆக,

வள்ளலார் ஒருமைக்கு தனியாக பொருள் ஏதேனும் தரவில்லை என்றால் தமிழ் அகராதிபடி காணலாம். ஆனால் ஒருமைக்கு என்ன பொருள் என்று பக்கம் 414 ஆவண எண்.4ல் வள்ளலார் தனியாகவே குறிப்பிட்டு உள்ளார்கள்.

ஒருமை என்பது; "தனது அறிவு ஒழுக்கம் ஒத்த இடத்தில், தானே கூடும், மற்றஇடத்தில், தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்பது".

## <u>அறிவு-ஒழுக்கம்</u>

மேலே ஒருமைக்கு பொருள் காணும் பொழுது, தனது அறிவு+ஒழுக்கம் ஒத்த இடம் என உள்ளது.

இங்கு தனது அறிவு என்பது அவரவர் பெற்றிருக்கும் அறிவு (Individual Knowledge).

இங்கு ஒழுக்கம் அதாவது வள்ளலாரின் சுத்த சன்மார்க்க ஒழுக்கம் என்பது எல்லா பற்றுக்களுக்கும் காரணமான "ஆசார" வகைகளை விட்டு கடவுளையே தொழுதல் என்றநெறி ஆகும்.

ஆக, **மேற்படியான சுத்த சன்மார்க்க ஒழுக்கநெறி அவரவர் பெற்றியிருக்கும் அறிவில் ஒத்து வந்தால் அங்கு**

**ஒருமை வரும். மேற்படியான ஒருமை வந்தால் 'தயவு' வரும். அந்த தயவே கடவுளின் உண்மையைக் காட்டும்.**

அறிவு + ஒழுக்கம் = சத்திய (உண்மை) அறிவு

இந்த சத்திய அறிவிலேயே கடவுள்நிலை காண்பதாக உள்ளது என்கிறார் வள்ளலார்

வள்ளலார் 22.10.1873ல் சொன்னது;

"தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும்".

## கருணை

இறையருள் பெறுவதற்கு "கருணை" வேண்டும். 'கருணை' ஒன்றேசாதனம் என்கிறார் வள்ளலார். 'கருணை' வேண்டும் என்றுதானே எல்லா மார்க்கங்களும் சொல்கின்றன. ஆனால் வள்ளலார் கருணைக்கு கீழ்வருமாறு விளக்கம் தருகிறார்கள் அது;

கருணை என்பது

**எல்லா உயிர்களிடத்தும் தயவும்,**

**ஆண்டவரிடத்தில் அன்புமே.**

'எல்லா உயிர்களிடத்தும் தயவு' என்பது கருணையின் ஒரு பகுதி. வள்ளலார் மேலும் பக்கம் 416-ல் சொன்னது;

"சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். காலம் தாழ்த்தாது எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் பாவிக்கும் உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்".

அடுத்து "ஆண்டவரிடத்தில் அன்பு" இப்பகுதி மிக முக்கியமாக அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டிய பகுதி.

அது "உண்மை அன்பாக" இருத்தல் வேண்டும் என்கிறார். வள்ளலார் தன்மார்க்கத்தில் மிக முக்கியமாக மூன்று சுபகுணங்களை குறிப்பிடுகிறார். (பக்கம் 549); அஃது;

உண்மையறிவு,

உண்மையன்பு,

உண்மையிரக்கம்,

**1. உண்மையறிவு.**

சுத்தசன்மார்க்கத்தின் அடிப்படை தகுதியில் ஒன்றுதான் "நல்லறிவு", ஆனால் இங்கு உண்மையறிவு என்கிறார் வள்ளலார். நல்லறிவு என்றால் என்ன என்பதற்கு திருவள்ளுவரின் திருக்குறள் துணை புரிகிறது. குறள் எண். 423.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு".

ஆக எந்தொரு பொருளானாலும் அதன் மெய் பொருள் காண்பதே "நல்லறிவு" என்கிறார் திருவள்ளுவர். இங்கு கடவுள் என்பது "சிவம்" ஆகும். சிவம் என்றால் செம்பொருள். கடவுள் என்று பெயரிட்டு அழைக்காதவர்களும் கூட "இயற்கை" என்ற பெயரிட்டு அழைக்கிறார்கள். ஆக அந்த சிவத்தின் உண்மையை அல்லது இயற்கையின் உண்மையை என்னவென்று அறியும் அறிவே "உண்மையறிவு" ஆகும்.

**2. உண்மையன்பு.**

பக்கம் 418ல் அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி ஆன்மவுருக்கம் என்கிறார் வள்ளலார். இங்கு ஆன்மா எது என்று அறிவதற்கு அதன் அறிவு என்ன என்று காண வேண்டும். ஆன்ம அறிவு என்பது "உண்மையறிதல்" (பக்கம் 345) என்கிறார் வள்ளலார்.

ஆக, எவர் ஒருவர் ஆண்டவரின் உண்மையை அறிகிறாரோ அவரே ஆண்டவரிடத்தில் உண்மையன்பால் வழிபாடு செய்கிறார் என்பதாகும்.

**3. உண்மையிரக்கம்**

ஜீவகாருண்யம் என்றால் என்ன என்று (பக்கம்420)ல் சொல்லும்பொழுது

"ஜீவகாருணியம் என்பது அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே".

மேற்படி ஜீவகாருணியம் உண்டாவதற்கு ஏது அல்லது துவாரம் யாதெனில்;

"கடவுளுடைய பெருமையையும் தரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே" ஆக, கருணை என்பது புறத்தில் எல்லா உயிர்களிடத்தில் தயவும் அதாவது அனைத்து உயிர்களையும் தம் உயிர் போல் பாவித்து இரக்கம் காட்டுதல் மற்றும் அகத்தில் கடவுளிடத்தில் அன்பும் அதாவது கடவுள் உண்மை நிலை குறித்து நல்ல விசாரணை செய்தல் ஆகும்.

## இயற்கை

வள்ளலார் மிகத்தெளிவாக தனது விண்ணபத்தில் (ஆவண எண். 7 & 8) குறிப்பிட்டுள்ள முக்கிய வரிகள் கீழ்வருமாறு ;

இயற்கை உண்மை,
இயற்கை விளக்கம்,
இயற்கை இன்பம்.

இங்ஙனமாகவும் கடவுளை விவரிக்கிறது வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம்.

- இ ய ற் கை உ ண் மை நி றை வ ா கி யு ள் ள ஓர் சுத்தசிவானுபவ வெளியில்
- இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ்சோதி சொரூபராய்
- இயற்கை இன்ப நிறைவாகி ஓங்கிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய்கையை எல்லா உயிர்களும் இன்பமடைதற் பொருட்டுத் திருவுளக் கருணையாற் செய்தருளுகின்ற சர்வ வல்லபராகிய தனித்தலைமை கடவுளே!

## உண்மைப்பொதுநெறி

என் மார்க்கம் அறிவு மார்க்கம் மற்றும் உண்மை மார்க்கம் என்கிறார் திருஅருட்பிரகாச வள்ளலார். (உரைநடைப் பகுதி பக்கம் 404)

எங்ஙனம் இது சரி? என விசாரிப்பது தானே நல்லறிவு, நாம் ஒருவாறு விசாரிப்போம்.

உயர்வு.

உயர்வு என்றால் என்ன?

தமிழ் அகராதிபடி ஒரு விளக்கம் யாதெனில்; ஏற்றம். (விலை ஏற்றம் / பயன் ஏற்றம்) இங்கு எந்த விதத்தில் தன் மார்க்கத்தை உயர்வு படுத்துகிறார் வள்ளலார்?

என் மார்க்கம் “இறப்பையொழிக்கும் மார்க்கம்”. ஆம், மிக உயர்ந்த பயனை நல்குவதாகவே அறிவித்துள்ளார் வள்ளலார். மேலும் “மரணமில்லா பெருவாழ்வு” என்ற ஏறா நிலையை நான் பெற்றேன். என்னைப்போல் நீங்களும் பெறுவதாக உள்ளது என்கிறார்.

உலகில் இதுவரை தோன்றியுள்ள சமய, மத, மார்க்கங்களில் இப்பயன் அறிவிக்கப்படவில்லை. மரணம் நிச்சயம் என்பதில் அவை ஒன்றுபடுகிறது. சுவர்க்கம், நரகம், அவையில் உண்டு. அவற்றில் அதிகபட்சம் "நீடுழி" வாழ்வதற்கான வழிவகை காணப்பட்டுள்ளது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள், பலநூறு ஆண்டுகள், சமய, மத மார்க்க சித்தர்கள் யோகிகள் ஞானிகள் கர்த்தர்கள் தேவர்கள் கடவுளர்கள் வாழ்ந்தார்கள் என்று உள்ள போதிலும் "மரணமில்லா பெருவாழ்வு" என்றஏற்றமானநிலை (உயர்வான நிலை) இதுவரை எவரும் அறிவித்திருக்கவில்லை. மேலும் இப்பெரும்பயனை பெறுவதற்கு நம்மிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தும் சாதி, சமய ஆசார வகைகளை ஒழித்து, "ஒழுக்கம்" நிரம்புதல் வேண்டும் என்ற பொதுநோக்க வழிவகையும் மிக்க சிறப்புடையதாகவே உள்ளது.

அடுத்து "அறிவு மார்க்கம்"

"அறிவு"க்கு குறளின்படி ஒரு பொருள் யாதெனில்; அறியவேண்டியவை என உள்ளது. ஆம், வள்ளலார் கடவுள் உண்டு என்றபோதிலும் அக்கடவுளின் உண்மையறிதல் வேண்டும் என்பதே அவரின் நெறியாக உள்ளது. பக்கம் 439ல் "அக அனுபவமே உண்மை" என்கிறார்கள். இடைவிடாது "நல்ல விசாரணை செய்யுங்கள்" என்கிறார். இந்த நல்ல விசாரணை எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு அவர் ஆற்றிய "மகா பேருபதேசத்தில்" விளக்கமாக தெரிந்துக்கொள்ளலாம்.

> **"நம் நம்முடைய நிலை எப்படி பட்டது? நமக்கு மேல் நம்மை அதிஷ்டிகின்றதெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது? என்று விசாரிக்க வேண்டியது";**

நிற்க, மற்றசமய, மத, மார்க்கத்தில் கடவுளாக இவர்களே என அறிவிக்கபட்டுள்ளது. அக்கடவுளை வழிபடுவதற்கு பல ஆசாரங்கள் என வகுக்கப்பட்டுள்ளது. இவை போன்று வள்ளலார் மார்க்கத்தில் அறிவிக்கப்படாமல் கடவுள் குறித்த உண்மையை ஒவ்வொருவரும் அறிதல் வேண்டும் என

அறிவிக்கப்பட்டதால் "அறிவு மார்க்கமே" அடுத்து, அறிவைப் பெற்றவர்கள் அறிஞர்கள் ஆவார்கள். வள்ளலார் தனது அகவல் பாடல் (எண். 99&100)

"எச்சபை பொது என இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி".

என்பதையும் கருத்தில் எடுத்துக் கொள்வோம்.

வள்ளலார் சுத்த சிவம் என அழைக்கிறார். இங்கு சிவம் என்றால் சமயத்தில் குறிப்பிட்டுள்ள சிவன் அல்ல என்று தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.

இதற்கு ஆதாரமாக பல பாடல்கள் அகவல் மற்றும் முடிபான பாடல்களில் குறிப்பாக பாடல் எண் 718ஐ கூறலாம்.

தன் மார்க்க கடவுள் புதிய உண்மை கடவுள் என்றேபிரகடனப்படுத்துகிறார். அக்கடவுளின் உண்மையை நம்மையே அறியச் சொல்கிறார். எந்தொரு ஆசாரமும் கூடாது என தடை விதிக்கிறார்கள். ஒழுக்கம் நிரம்புதல் வேண்டும். கருணை ஒன்றேசாதனம். சமாதி பழக்கம் இல்லை. தவம், யாகம், மந்திரங்கள் ஜபித்தல் உட்பட எவையும் இல்லை. (பக்கம் 405).

மேலும், உயிர்களை அறிவின் அடிப்படையிலேயே அபக்குவர்கள், பக்குவர்கள், பக்குவாபக்குவர்கள் என பிரித்து பார்க்க முடியும். எவரையும் தீண்டதகாதவர்கள், பாவிகள், விரோதிகள், என அழைக்க முடியாது கூடாது என்கிறார்கள்.

எந்தொரு தாழ்ந்த நிலையில் எவர் இருந்தாலும் இம்மார்க்கத்திற்கு வரமுடியும். நாம் அவர்களை வரவழைக்க வேண்டும் என்பதின் மூலம் வள்ளலாரின் நெறி அவர் அறிவித்தபடி "எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும், எல்லா மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக" விளங்குகிறது. ஆனால் வள்ளலார் 22-10-1873ல் சொன்ன சத்திய வாக்கியம் என்ன தெரியுமா?

*"உண்மை சொல்ல வந்தனனே*
*என்று உண்மை சொல்லப் புகுந்தாலும்*
*தெரிந்து கொள்வாரில்லை"*

## சாகா கல்வி
## (மரணமில்லா பெரிய வாழ்வு)

வள்ளலார் அறிவித்தது;

"சுத்த சன்மார்க்கத்தின் முடிபு சாகா கல்வியை தெரிவிப்பதேயன்றி வேறு ஒன்றுமில்லை" (பக்கம் 411).

"என்மார்க்கம் இறப்பை ஒழிக்கும் மார்க்கம்"

அவர்தம் அறிவிப்பு விளம்பரம் நாள். 25.11.1872 (ஆவண எண்.3)ல் "சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே அகம்புறமுதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்து சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொது வெளியில் அறிவார் அறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்றார்".

மேலும், "அவ்வாறு விளங்குகின்றஒருவரேயாகிய கடவுளை இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்பு செய்து அருளையடைந்து அழிவில்லாத சத்திய சுகபூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பல்வேறு கற்பனைகளாற் பல்வேறு சமயங்களிலும் பல்வேறு மதங்களிலும் பல்வேறு மார்க்கங்களிலும் பல்வேறு லட்சியங்களைக் கொண்டு, நெடுங்காலமும், பிறந்து பிறந்து அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவு மின்றி விரைந்து விரைந்து பல்வேறு ஆபத்துகளினால் துன்பத்தில் அழுந்தி **இறந்திறந்து வீண் போகின்றார்கள்**" என்கிறார் வள்ளலார்.

மேலும் ஆவணம் 7ல் "அத்திருவருள் விளக்கத்தால் **மரணம்**, பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் தவிர்த்து........" என்கிறார்.

ஆக, வள்ளலார் மார்க்கத்தின் முடிபாக உள்ளது யாதெனில்;

"மரணம் தவிர்த்து, இத்தேகத்தையே நித்தியதேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வினை பெறுதலே" ஆகும்.

இங்கு நித்தியதேகம் என்பது ஒரு தனி வடிவம்

- சாகாத்தலை
- வேகாக்கால்
- போகாப்புனல்

இவை மூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும். மேற்குறித்த மூன்றும் பரமார்க்கமாகிய ஞான யோகக் காட்சியில் யோக அனுபவங்களின் உண்மைப் பொருள்கள் ஆகும்.

மேற்படி ஞான யோக அனுபவ நிலைகள் ஏழு.

இவை **படிப்பினால் அறியக்கூடியது** அல்ல.

இவற்றை**அனுபவத்தினாலறிக** என்கிறார் வள்ளலார் (உபதேசக்குறிப்பு பக்கம் 438).

சாகின்றவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். (பக்கம் 411) "சாகாதவனே சுத்த சன்மார்க்கி " என்கிறார் வள்ளலார்.

## வள்ளலார் பெற்றவடிவம்

வள்ளலார் சுத்த சன்மார்க்கப் பெரும் பயனாகிய "**மரணமில்லா பெருவாழ்வு**" பெற்றார்கள். அவர் உருவம் தோற்றியும் தோற்றாமலும் இருக்கும் அவர் நினைத்தால் காணமுடியும் இல்லாது காண முடியாது. இதை அவர் தம் பாடல்கள் மூலம் அறியலாம்.

## எதனாலும் தடுக்கப்படாத வடிவம்

**பாடல் எண் 788**

ஆராலும் அறிந்துகொளற் கரியபெரும் பொருளே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
படுதலாத் தனிவடிவம் எனக்களித்த பதியே
சீராலும் குணத்தாலும் சிறந்தவர்சேர் ஞான
சித்திபுரத் தமுதேஎன் நித்திரைதீர்ந் ததுவே.

**பாடல் எண் 1733**

## எதனாலும் அழியாத வடிவம்

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறவியற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே.

## உரு, அரு, உருஅரு அவை ஒன்றுமிலா வடிவம்

உருவாய் அருவாய் உருவரு வாய்அவை
ஒன்றுமல் லீர்இங்கு வாரீர்
என்றும்நல் லீர்இங்கு வாரீர்.

பாடல் எண் 155

## அருட்சோதி தேகம்

களித்தென துடம்பில் புகுந்தனை எனது
கருத்திலே அமர்ந்தனை கனிந்தே
தெளித்தஎன் அறிவில் விளங்கினை உயிரில்
சிறப்பினால் கலந்தனை உள்ளம்
தளிர்த்திடச் சாகா வரங்கொடுத் தென்றும்
தடைபடாச் சித்திகள் எல்லாம்
அளித்தனை எனக்கே நின்பெருங் கருணை
அடியன்மேல் வைத்தவா றென்னே.

அன்பர்களே!

மேற்படி அனுபவம் ஏற்பட மற்றும் சாகா கல்வி கைகூட, எவ்வகை இச்சைகளிலும் நம்மறிவை பற்றுவிக்காமல், எல்லாவுயிர்களையும் பொதுமையினோக்கி, “கருணை” நன்முயற்சியை பெறுவித்தச் சுத்த சன்மார்க்கத் தனிநெறி ஒன்றையே பயிலுதல் வேண்டும்.

## பரிபாஷையும், சுத்த சன்மார்க்கமும்

பரிபாஷை, அங், சிங், வங், பங், அம், விந்து, நாதம், சிவ, வசி, ஓம், அரி, அர, சத்து, சித்து, ஆனந்தம், பரிபூரணம், ஜோதி, சிவயவசி, **சிவாயநம, நமசிவாய,** ஆ,ஈ,ஊ,ஐ,நாராயணாயநம, சிவோகம், சோகம் முதலியவாகச் சமயமதங்களில் குறிக்கப்பட்ட மந்திர தந்திர ரகசிய வாசக வாச்சிய வன அக்ஷர தத்துவ பவதிக முதலியவையும் பரிபாஷையாம். மேற்குறித்த வண்ணம், **சமாதி செய்தும், சுவாசத்தை அடக்கியும்,** விரதமிருந்தும், இவை போன்றவேறுவகைத் தொழிற்பட்டுப் பிரயாசையெடுப்பது வியர்த்தம். சுத்தசன்மார்க்கமே சிறந்தது. பாவானாதீதாதீதம், குணாதீதாதீதம், வாச்சியாதீதாதீதம், லட்சியாதீதாதீதம் ஆகிய சுத்த சன்மார்க்கப் பொருளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் இதனது உண்மைகள் இனி வெளிப்படும்.

## வள்ளலார் தெய்வமா?

வள்ளலார் தனது மகா பேருபதேசத்தில் (நாள் 22-10-1873) "...........தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலே யல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள் என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன் இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்துகொள்ளவில்லை யென்றால்; ஒரு பதார்த்தத்தை அனுபவித்தாலல்லது அந்தப் பதார்த்ததினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தாலல்லது,

தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்து கொள்ளவேண்டு மென்கிறமுக்கிய லட்சியத்திலிருந்து கொண்டு விசாரஞ் செய்து கொண்டிருங்கள்.

அந்த விசாரம் செய்வது எப்படியென்றால் அண்டத்தில் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள், இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப சுபாவம் என்ன? இவை முதலான அண்ட விசாரமும், பிண்டத்தில் நாம் யார்? இத்தேகத்தின்கண் புருவம் கைம்மூலம் இவைகளிலும் இவை போன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோன்றாதிருப்பதென்ன? கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும் அந்நகம் வளர்தலும். இவை போன்றமற்றத் தத்துவங்களினது சொரூப, ரூப சுபாவங்களும் என்னவென்றும் பிண்ட விசாரமுஞ் செய்து கொண்டிருந்தால், இவ்வுலகத்தின்கணுள்ள ஜனங்கள் அதைக் குறித்துக் ஏளனமாகச் சொல்லுவர்கள். அப்படிச் சொல்வது அவர்களுக்குச் சுபாவம். ஏனெனில், அவர்களுக்கு உண்மை தெரியாது. ஆதலால் நீங்கள் அதை லட்சியம் செய்யக் கூடாது........"

-வள்ளலார்

## சுத்த சன்மார்க்கத்திற்கு சமய, மத மார்க்கங்கள் அந்நியமா?

வள்ளலார் பக்கம் 402 உரை நடைப் பகுதியில் இது குறித்து கீழ்வருமாறு சொல்லியுள்ளார்கள்.

“சன்மார்க்கம், சிவ சன்மார்க்கம் மற்றும் சமய, மத மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம். ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல் சுத்த சன்மார்க்கத்திற்கு சமய, மத, சிவ சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம் (அந்நியமல்ல).”

## அன்னதானம்

பசி நிவர்த்தி பற்றி வள்ளலார் குறிப்பிட்டது; (பக்கம் 151);

சுத்த சன்மார்க்கத்தார் அனைவரும், எந்த **வகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குப்** பசி நேரிட்டபோது மிகவும் கருணை உள்ளவர்களாகி நம்மாற் கூடியமட்டில் அந்த பசியென்கின்றஆபத்தைப் பொதுவாக நிவர்த்திப்பதற்கு முயற்சி செய்வதே ஆன்ம லாபம் என்று அவசியம் அறிய வேண்டும் என்கிறார் வள்ளலார்.

ஆக, எந்தவகையிலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்கு மட்டும் நம்மால் கூடிய வரையில் பசியாற்றுவதே அன்னதானம் ஆகும் என அறிதல் வேண்டும்.

## எந்த அறிவைக் கொண்டு கடவுளை அறிய வேண்டும்?

உபதேசக் குறிப்பில் பக்கம் 345ல் வள்ளலார் குறிப்பிட்டது;

கடவுளை "உண்மை ஞானத்தால்" அறியக்கூடும். உண்மை ஞானம் என்பது ஆன்ம அறிவு ஆகும். அறிவு வகை நான்கு. அவையாவன.

1. இந்திரிய அறிவு

ஒரு பொருளினது நாமரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக் காட்சி, இந்திரிய அறிவு. (இதற்கு பிண்டத்தில்: கண் முதலிய இந்திரியங்கள் ஆகும். அண்டத்தில்: நட்சத்திரங்கள் ஆகும்.)

2. மன அறிவு

ஒரு பொருளினது நாம ரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் கரணமாகிய மன அறிவு

(இதற்கு பிண்டத்தில்: கரணம் அண்டத்தில்: சந்திரன்)

3. ஜீவ அறிவு

ஒரு பொருளினது பிரயோஜனத்தை அறிந்த அறிவு ஜீவ அறிவு (இதற்கு பிண்டத்தில் ஜீவன், அண்டத்தில் சூரியன்)

4. ஆன்ம அறிவு

ஒரு பொருளினது உண்மையை அறிதல் ஆன்ம அறிவு (இதற்கு பிண்டத்தில் ஆன்மா அண்டத்தில் அக்கினி)

மேற்படி அறிவில் ஏற்படும் ஞான வகை மூன்று

1. ஜீவ அறிவு-உபாய ஞானம் (நட்சத்திர பிரகாசம்)
2. ஆன்ம அறிவு-உண்மை ஞானம் (சந்திர பிரகாசம்)
3. கடவுளறிவு-அனுபவ ஞானம் (சூரிய பிரகாசம்)

ஆகையால் "கடவுளை" ஆன்ம அறிவை (உண்மை ஞானம்) கொண்டு அறிய வேண்டும். வள்ளலாரின் சுத்த சன்மார்க்கத்தில் "உண்மையறிதலே" நல்ல விசாரணையாக உள்ளது. இது "அறிவு மார்க்கம்" ஆகும். இம் மார்க்கத்தில் அக அனுபவமே உண்மையாக உள்ளது. உபாய வகைகளான அபரமார்க்கக் காட்சி கூடாது. (கிடையாது).

மேற்படி அக அனுபவம் ஏற்பட "ஒழுக்கம்" நிரம்புதல் வேண்டும் என்றும் அதற்கு கருணை ஒன்றையே சாதனமாக கொள்ளல் வேண்டும் என்றும், மேலும் காருணியத்திற்கு தடையாகயிருக்கும் சாதி, சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களை ஒழிக்க வேண்டும் என்பதே வள்ளலார் கண்ட உண்மை வழியாகும். அந்த வழி (மார்க்கம்)யின் பெயரே "சுத்த சன்மார்க்கம்" ஆகும்.

## சமய நூல்களின் உண்மை

(உரைநடைப்பகுதி பக்கம் 375)

பெரியபுராணத்தில் குறித்த 63 நாயன்மார்களை அனுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும். இதுபோல சைவத்தில் சொல்லுகின்றசௌராதி சண்டை பரியந்தமும் தத்துவமே யாம். சைவ புராணம் விஷ்ணு புராணம் முதலிய யாவற்றின் உண்மையும் **தத்துவ சம்மாரங்கள்.** ஒவ்வொரு மஹான்கள் சாஸ்திரங்களையும், தேவாரம். திருவாசகங்கள் முதலியவைகளையும் அமைத்து, இவற்றிற்கு இடமாக ஆலயங்கள் அமைத்து, மேற்படி சித்திக்கு உரிய தத்துவதத்துவிகளின் பெயரைக் கர்த்தாவாக்கி, அந்தச் சித்தி முடிக்குங் காலம் தினம் கருவி முதலியவைகளை மேற்படி ஆலயங்கஞக்கு விசேஷ காலமாக்கி, வழக்கத்தில் வருவித்தார்கள். மேற்குறித்த நாயன்மார் முதலியவர்களின் உண்மையனுபவ தார்பரியமுடைய சித்திகள் முன்னும் பின்னும் இனியுமுள. நாம் மேற்படி தத்துவங்களை அனுஷ்டித்தால் அவ்விதமாக ஆகக் கூடும். இது போலவே திருவிளையாடல் பாரத பாகவதங்களும் அமைத்துக் கொள்க. ஒருவாறு, **கணபதி, சுப்பிரமணிய சுவாமிகளும் தத்துவங்களே தவிரவேறல்ல.** புராணங்களின் இருதயமெல்லாம் தத்துவ சம்மாரமே. இதன் உண்மை சுத்த சன்மார்க்கத்தில் விவரமாய் வெளியாகும்.

## சுத்த சன்மார்க்கக் கொள்கை

சர்வசித்தியையுடைய தனித்தலைமைப் பதியாகிய ஆண்டவரை நோக்கி அணுக்கள் தபசு செய்து சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியங்களையும் பெற்றுக்கொண்ட மூர்த்திகளாகியவர்

ஒரு தொழிலுடைய பிரமாவும், இரண்டு சித்தியுடைய விஷ்ணுவும், மூன்று சித்தியுடைய ருத்திரனும் இதுபோன்றமற்றையர்களும். மேற்குறித்த மூவரால் ஏற்படுத்திய தத்துவசித்திக் கற்பனைகளாகிய சமய மத மார்க்கங்களை அனுஷ்டித்து, அவர்களையே கர்த்தாக்களாக வணங்கி வழிபாடு செய்துவருகின்றஇது வரையிலுள்ள அணுக்கள் மேற்குறித்தவர்களது பதப்பிராப்தியை மேற்படி அணுக்கள் லேசம் பெற்றுக் கொண்டார்கள். ஆதலால் இவர்களை அசைப்பித்து அனுக்கிரகிக்கும் சர்வ சித்தியையுடைய தனித்தலைமைக் கடவுளின் சித்தியின் லேசங்கள் இவர்களுக்குள. ஆதலால் இவர்கள் அந்தச் சர்வ சித்தியை யுடைய கடவுளுக்குக் கோடி கோடிப்பங்கு தாழ்ந்த தரத்திலிருக்கின்றார்கள். ஆகவே சமயத் தேவர்களை வழிபாடு செய்வது அவசியமல்ல. மேற்குறித்தவர்கள் அற்ப சித்தியைப் பெற்று, அதில் மகிழ்ந்து அகங்கரித்து, மேல் படிகள் ஏறவேண்டியவைகளை ஏறிப் பூரண சித்தியை யடையாமல் தடைப்பட்டு நிற்றல்போல்,

**இங்கு மற்றவைகளை உன்னி அவலமடைந்து நில்லாமல், சர்வ சித்தியுடைய கடவுள் ஒருவருண்டென்று, அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து, பூரண சித்தியைப் பெறவேண்டுவது சன்மார்க்கக் கொள்கை.**

மேலும், தனித்தலைவன் லட்சியம் தவிர அநித்திய சடதுக்காதிகளைப் பொருட்படுத்தி உபாசனாதி மார்க்கமாய் வழிபடுவது கொள்கை அல்ல.

உபாசனை முதலியவற்றால் வழிபடுதலும் மேற்குறித்த தலைவனைக் குறித்ததே தவிர வேறில்லை.

## வள்ளலாரின் கடைசி அறிவிப்பு

வள்ளலார் இப்பாடல்களைப் பற்றிக்கூறியது யாதெனில்; உங்களுடைய காலத்தை வீணிற்கழிக்காமல் 'நினைந்து நினைந்து' என்னும் தொடக்கமுடைய 28 பாசுரப்பாடல்களில் கண்டபடி தெய்வ பாவனையை தீபத்தில் செய்யுங்கள்.

வள்ளலாரின் முடிபான கடவுள் கொள்கையையும் அவரின் "உண்மைப்பொது நெறியையும்" உள்ளது உள்ளபடி நாம் அறிய அவர் இயற்றிய 28 பாசுரப்பாடல்களை (ஆவண எண் 10) ஊன்றி வாசிக்க வேண்டும். இது வள்ளலாரின் வேண்டுகோள் மற்றும் கட்டளை என அறிக.

## சுத்த சன்மார்க்க கொள்கை விளக்கும் 28 திருப்பாடல்கள்

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதம்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே. 1

புகுந்தருணம் இதுகண்டீர் நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழிஓர் பொய்மொழிஎன் னாதீர்
உகுந்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்
உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே
மிகுந்தசுவைக் கரும்பேசெங் கனியேகோற் தேனே
மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியா மணியே

தகுந்ததனிப் பெரும்பதியே தயாநிதியே கதியே
சத்தியமே என்றுரைமின் பத்தியொடு பணிந்தே. 2

பணிந்துபணிந் தணிந்தணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந் துரைத்திடில்அப் பொழுதே
காணாத காட்சிஎலாம் கண்டுகொளல் ஆமே. 3

கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமேஉட் கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மையறிந் திலிரே
விண்டதனால் என் இனிநீர் சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள்நன் குணர்ந்தே
எண்டகுசிற் றம்பலத்தே எந்தைஅருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம் இன்பமுறலாமே. 4

இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திடவாழ்ந் திடலாம்
எல்லாம்செய் வல்லசித்தி இறைமையும்பெற் றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே சமரசசன் மார்க்கம்
அடைந்திடுமின் அகவடிவிங் கனகவடி வாகிப்
பொன்புடைநன் கொளிர்ஒளியே புத்தமுதே ஞான
பூரணமே ஆரணத்தின் பொருள்முடிமேல் பொருளே
வன்புடையார் பெறற்கரிதாம் மணியேசிற் சபையின்
மாமருந்தே என்றுரைமின் தீமையெலாம் தவிர்ந்தே. 5

தீமைஎலாம் நன்மைஎன்றேதிருஉளங்கொண் டருளிச்
சிறியேனுக் கருளமுதத் தெளிவளித்த திறத்தை
ஆமயந்தீர்த் தியற்கைஇன்ப அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்றஅருட்பெருஞ்ஜோ தியைஓர்
ஓமயவான் வடிவுடையார் உள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை உடையபெரும் பதியை

நாமருவி இறவாத நலம்பெறலாம் உலகீர்
நல்லஒரு தருணம்இது வல்லேவம்மின் நீரே. 6

நீர்பிறரோ யான்உமக்கு நேயஉறவலனோ
நெடுமொழியே உரைப்பன் அன்றிக் கொடுமொழிசொல் வேனோ
சார்புறவே அருளமுதம் தந்தெனைமேல் ஏற்றித்
தனித்தபெருஞ் சுகம்அளித்த தனித்தபெரும் பதிதான்
சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்றதிருநாள்கள் அடுத்த
ஓர்புறவே இதுநல்ல தருணம்இங்கே வம்மின்
உலகியலீர் உன்னியவா றுற்றிடுவீர் விரைந்தே. 7

விரைந்துவிரைந் தடைந்திடுமின் மேதினியீர் இங்கே
மெய்மைஉரைக் கின்றேன்நீர் வேறுநினை யாதீர்
திரைந்துதிரைந் துளுத்தவரும் இளமைஅடைந் திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும் சித்தாடல் புரிய
வரைந்துவரைந் தெல்லாஞ்செய் வல்லசித்தன் தானே
வருகின்றதருணம்இது வரம்பெறலாம் நீவிர்
கரைந்துகரைந் துளம்உருகிக் கண்களில்நீர் பெருகிக்
கருணைநடக் கடவுளைஉட் கருதுமினோ களித்தே. 8

களித்துலகில் அளவிகந்த காலம்உல கெல்லாம்
களிப்படைய அருட்ஜோதிக் கடவுள்வரு தருணம்
தெளித்திடும்எத் தருணம்அதோ என்னாதீர் இதுவே
செத்தவரை எழுப்புகின்றதிகழ்தருணம் உலகீர்
ஒளித்துரைக்கின்றேன் அலன்நான் வாய்ப்பறைஆர்க் கின்றேன்
ஒருசிறிதும் அச்சமுறேன் உள்ளபடி உணர்ந்தேன்
அளித்திடுசிற் றம்பலத்தென் அப்பன் அருள் பெறவே
ஆசைஉண்டேல் வம்மின்இங்கே நேசமுடையீரே. 9

ஆசைஉண்டேல் வம்மின் இங்கே அருட்ஜோதிப் பெருமான்
அம்மையுமாய் அப்பனுமாய் அருளும்அரு ளாளன்
ஏசறநீத் தெனை ஆட்கொண் டெண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய் வல்லசித்தன் என்னுயிரில் கலந்தான்
தேசுடைய பொதுவில் அருள் திருநடனம் புரியத்
திருவுளங்கொண் டெழுந்தருளும் திருநாள்இங் கிதுவே
மோசஉரை எனநினைத்து மயங்காதீர் உலகீர்
முக்காலத் தினும்அழியா மூர்த்தம் அடைந் திடவே. 10

அடைந்திடுமின் உலகீர்இங் கிதுதருணம் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதிஎன் அப்பன்வரு தருணம்
கடைந்தனித் திருவமுதம் களித்தருத்தி எனக்கே
காணாத காட்சிஎலாம் காட்டுகின்றதருணம்
இடைந்தொருசார் அலையாதீர் சுகம்எனைப்போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறென் றெண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்தசம யக்குழிநின் றெழுந்துணர்மின் அழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறிபெற் றுவந்தே. 11

திருநெறிஒன் றேஅதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண் டருளமுதம் அளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித் துண்மைஉரைத் தேனே. 12

உண்மையுரைக் கின்றேன்இங் குவந்தடைமின் உலகீர்
உரைஇதனில் சந்தேகித் துளறிவழி யாதீர்
எண்மையினான் எனநினையீர் எல்லாஞ்செய் வல்லான்
என்னுள் அமர்ந் திசைக்கின்றான் இதுகேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்துவிரைந் தேறுமினோ சத்தியவாழ் வளிக்கக்
கண்மைதரும் ஒருபெருஞ்சீர்க் கடவுள்எனப் புகலும்
கருணைநிதி வருகின்றதருணம்இது தானே. 13

தானேதான் ஆகிஎலாம் தானாகி அலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடும்என் தந்தையைஎன் தாயை
வானேஅவ் வான்கருவே வான்கருவின் முதலே
வள்ளால்என் றன்பரெலாம் உள்ளாநின் றவனைத்
தேனேசெம் பாகேஎன் றினித்திடுந்தெள் ளமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச் சிந்தைசெய்மின் உலகீர்
ஊனேயும் உடலழியா தூழிதொறும் ஓங்கும்
உத்தமசித் தியைப்பெறுவீர் சத்தியம்சொன் னேனே. 14

சத்தியவே தாந்தமெலாம் சித்தாந்தம் எல்லாம்
தனித்தனிமேல் உணர்ந்துணர்ந்தும் தனையுணர்தற் கரிதாய்
நித்தியசிற் சபைநடுவே நிறைந்துநடம் புரியும்
நித்தபரி பூரணனைச் சித்தசிகா மணியை
அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்
ஆவியைஎன் ஆவியிலே அமர்ந்ததயா நிதியைச்
சித்தியெலாம் எனக்களித்த சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ நிந்தைஎலாம் தவிர்ந்தே. 15

நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்தபெருந் தகையை
நிலையனைத்தும் காட்டிஅருள் நிலைஅளித்த குருவை
எந்தையைஎன் தனித்தாயை என்னிருகண் மணியை
என்உயிரை என்உணர்வை என்அறிவுள் அறிவை
சிந்தையிலே தனித்தினிக்கும் தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகீர்
முந்தைமல இருட்டொழிய முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண நடுக்கொழித்து முயன்றே. 16

முயன்றுலகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும்
முடுகிஅழிந் திடவும்ஒரு மோசமும்இல் லாதே
இயன்றஒரு சன்மார்க்கம் எங்குநிலை பெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல் இதுதருணம் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்றஎழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடும்நீர்
பயின்றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே. 17

சுகமறியீர் துன்பம்ஒன்றேதுணிந்தறிந்தீர் உலகீர்
சூதறிந்தீர் வாதறிந்தீர் தூய்மையறிந் திலிரே
இகம்அறியீர் பரம்அறியீர் என்னேநுங் கருத்தீது
என்புரிவீர் மரணம்வரில் எங்குறுவீர் அந்தோ
அகமறியீர் அனகமறிந் தழியாத ஞான
அமுதவடி வம்பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே
முகமறியார் போலிருந்தீர் என்னைஅறி யீரோ
முத்தரெலாம் போற்றும்அருட் சித்தர்மகன் நானே. 18

நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்தன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே
வான்உரைத்த மணிமன்றில் நடம்புரிஎம் பெருமான்
வரவெதிர்கொண் டவன்அருளால் வரங்கள்எலாம் பெறவே
தேன்உரைக்கும் உளம்இனிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்தடைந்தென் உடன்எழுமின் சித்திபெறல் ஆகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினைநீர் தான்அடைதல் குறித்தே. 19

குறித்துரைக்கின் றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின்
கோணும்மனக் குரங்காலே நாணுகின்றஉலகீர்
வெறித்தஉம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதம் சமயம்எலாம் பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம்ஒன்றேபொருள்எனக்கண் டறிமின்
செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்துதுதித் திடுமின்
சித்திஎலாம் இத்தினமே சத்தியம்சேர்ந் திடுமே. 20

சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரசசன் மார்க்கத்
திருநெறியே பெருநெறியாம் சித்திஎலாம் பெறலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகம்எலாம் கண்டிடும்ஓர் உளவைஅறிந் திலிரே
வார்ந்தகடல் உலகறிய மரணம்உண்டே அந்தோ
மரணம்என்றால் சடம்எனும்ஓர் திரணமும்சம் மதியா
சார்ந்திடும்அம் மரணமதைத் தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடுசிற் சபைநடத்தைத் தரிசனஞ்செய் வீரே. 21

செய்தாலும் தீமைஎலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தான்அங் கவனை
மெய்தாவ நினைத்திடுக சமரசசன் மார்க்கம்
மேவுகஎன் றுரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக்கொண் டிடுவேன்
மனக்கோணேன் மானம்எலாம் போனவழி விடுத்தேன்
பொய்தான்ஓர் சிறிதெனினும் புகலேன்சத் தியமே
புகல்கின்றேன் நீவிர்எலாம் புனிதமுறும் பொருட்டே. 22

பொருட்டலநும் போகம்எலாம் பொய்யாம்இங் கிதுநான்
புகலுவதென் நாள்தொறுநும் புந்தியிற்கண் டதுவே

மருட்டுலகீர் இருட்டுலகில் மடிவதழ கலவே
மரணமிலாப் பெருவாழ்வில் வாழவம்மின் இங்கே
பொருட்டிறஞ்சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
பொருந்துமின்சிற் சபைஅமுதம் அருந்துமின்அன் புடனே
அருட்டிறஞ்சேர்ந் தெண்ணியவா றாடுமினோ நும்மை
அடுப்பவரே அன்றிநின்று தடுப்பவர்மற் றிலையே. 23

மற்றறிவோம் எனச்சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும்அதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்கள் அல்லால் அதனை
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லைகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
பற்றியபற் றனைத்தினையும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றேபற்றுமினோ என்றும்இறவீரே. 24

இறந்தவரை எடுத்திடும்போ தரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெருவரம்நீர் ஏன்அடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணிமூப்பில் சம்மதமோ நுமக்கு
மறந்தும்இதை நினைக்கில்நல்லோர் மனம்நடுங்கும் கண்டீர்
சிறந்திடுசன் மார்க்கம்ஒன்றேபிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்துவம்மின் இங்கே
பிறந்தபிறப் பிதில்தானே நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே. 25

உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன்அன்றிப் பகைவன்என உன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக்காண் கின்றீர்
கரணம்எலாம் கலங்கவரும் மரணமும்சம் மதமோ
சற்றும்இதைச் சம்மதியா தென்மனந்தான் உமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடுசேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே. 26

சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை என்னைத்
தாங்குகின்றபெரும்பதியைத் தனித்தசபா பதியை
நன்மார்க்கத் தெனைநடத்திச் சன்மார்க்க சங்கம்
நடுவிருக்க அருளமுதம் நல்கியநா யகனைப்

புன்மார்க்கர்க் கறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரணமெய்ப் பொருளாகிப் பொருந்தியமா மருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ்செய்
அருட்பெருஞ்ஜோ தியைஉலகீர் தெருட்கொளச்சார் வீரே. 27

சார்உலக வாதனையைத் தவிர்த்தவர்உள் ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தமசற் குருவை
நேர்உறவே எவராலும் கண்டுகொளற் கரிதாம்
நித்தியவான் பொருளைஎலா நிலைகளுந்தான் ஆகி
ஏர்உறவே விளங்குகின்றஇயற்கைஉண்மை தன்னை
எல்லாம்செய் வல்லபத்தை எனக்களித்த பதியை
ஓர்உறவென் றடைந்துலகீர் போற்றிமகிழ்ந் திடுமின்
உள்ளம்எலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே. 28.

## 1 முதல் 6 திருமுறைகள் பற்றிய குறிப்புகள்

1867 - 1 முதல் 4 திருமுறைகள் அன்பர்களின் வேண்டுகோளை ஏற்று 1867ம் ஆண்டு அன்பர்களால் வெளியிடப்பட்டது.

1871 - ஒரு புதிய மார்க்கத்தை கண்டு வெளிப்படுத்துகிறார்கள். அம்மார்க்கம் சுத்த சன்மார்க்கம்.

1871 - 1873 சுத்த சன்மார்க்கப் பாடல்கள் இயற்றுகிறார்கள். அப்பாடல்கள் அனைத்தையும் வள்ளலாரே வெளியிடுகிறார்கள். வெளியீட்டுப்பாடலையும் இயற்றுகிறார். அப்பாடல் தொகுப்பு (12 பாடல்கள்) பாமாலை ஏற்றல் என்று பெயரிடப்பட்டுள்ளது. (இப்பாடல்களை 6ம் திருமுறை என அழையாது சுத்த சன்மார்க்க பாடல்கள் என அழைத்தல் வேண்டும்).

1873 - 1 முதல் 4 திருமுறையிலுள்ள **சமய ஸ்தோத்திரப் பாடல்களை கைவிடுதல் வேண்டும்** என வள்ளலார் கட்டளையிடுகிறார்கள்.

1880 - அச்சிட விடுப்பட்ட வள்ளலாரின் சமய ஸ்தோத்திரப் பாடல்களையும் மற்ற பாடல்களையும் தொகுத்து **ஐந்தாம் திருமுறை** என பெயரிட்டு திரு. வேலாயுத முதலியார் வெளியிடுகிறார். (சமய ஸ்தோத்திரப் பாடல்களை அச்சிட்ட இச்செயல் சுத்தசன்மார்க்கத்தின் முடிபான கொள்கைக்கு முரணான செயல். அவர் சமயப் பற்றுடனே இருந்தார் என்பதற்கு இதுவே சாட்சி).

## சமய மத மார்க்கங்களை குறித்து வள்ளலார் பாடிய (சாடிய) சில பாடல்களில் சில:-

| பாடல் எண் | சுத்தசன்மார்க்கப் பாடல்கள் |
|---|---|
| 64 | மான மேடச் சாதியே மதமே<br>வாழ்க்கை யேஎன வாரிக்கொண் டலைந்தேன் .....<br>.... அப்ப னேஎனை ஆண்டுகொண் டருளே. |
| 72 | சாதிமதம் சமயம்எனும் சங்கடம்விட் டறியேன்<br>சாத்திரச்சே றாடுகின்றசஞ்சலம்விட் டறியேன். |
| 185 | கூறுகின்றசமயம்எலாம் மதங்கள்எலாம் பிடித்துக்<br>கூவுகின்றார் பலன்ஒன்றும் கொண்டறியார் வீணே<br>நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்<br>நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ...... |
| 186 | வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்<br>விளம்புநெறிஇதிகாசம் விதித்தநெறி முழுதும்<br>ஓதுகின்றசூதனைத்தும் உளவனைத்தும் காட்டி<br>உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே<br>ஏதமறஉணர்ந்தனன் வீண் போதுகழிப் பதற்கோர்<br>எள்ளளவும் எண்ணம்இலேன் என்னோடுநீ புணர்ந்தே<br>தீதறவே அனைத்தும்வல்ல சித்தாடல் புரிவாய்<br>சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே. |
| 187 | கலையுரைத்த கற்பனையே நிலைஎனக்கொண் டாடும்<br>கண்மூடி வழக்கம்எலாம் மண்மூடிப் போக<br>மலைவறுசன் மார்க்கம்ஒன்றேநிலைபெறமெய் உலகம்<br>வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினைஎன் தனக்கே ..... |

202 சரியைஓர் நான்கும் கிரியைஓர் நான்கும் சாற்றிடும்
யோகமோர் நான்கும்
புரியவும் பதங்கள் பொருந்தவும் எனது புந்தியில்
ஆசைசற் றறியேன்
பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை பெற்றிலேன்
முத்திபெற் றிடவும்
உரியதோர் இச்சை எனக்கிலை என்றன் உள்ளம்நீ
அறிந்ததே எந்தாய்.

220 மலத்திலே கிடந்தேன் தனையெடுத் தருளி
மன்னிய வடிவளித் தறிஞர் .....

306 கருணையும் சிவமே பொருள்எனக் காணும் காட்சியும்
பெறுகமற் றெல்லாம்
மருள்நெறி எனநீ எனக்கறி வித்த வண்ணமே
பெற்றிருக் கின்றேன்
இருள்நெறி மாயை வினைகளால் கலக்கம் எய்திய
தென்செய்வேன் எந்தாய்
தெருள்நிலை இன்றிக் கலங்கினேன் எனினும் சிறுநெறி
பிடித்ததொன் றிலையே.

336 இமையவர் பிரமர் நாரணர் முதலோர் எய்துதற்
கரியபே ரின்பம்
தமைஅறிந் தவருட் சார்ந்தபே ரொளிநம் தயாநிதி
தனிப்பெருந் தந்தை அமையும்நம் உயிர்க்குத்
துணைதிருப்பொதுவில் ஐயர்தாம்வருகின்றசமயம்
சமயம்இப் போதென்றெண்ணிநான் இருக்கும் தன்மையும்
திருவுளம்அறியும்.

353 இச்சாதி சமயவிகற் பங்களெலாம் தவிர்ந்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்.....

363 சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன் சாத்திரக்
குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியப் பொருளும் நித்திய
வாழ்க்கையும் சுகமும்

ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்
ஜோதிஎன் றறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீஅறிந் ததுநான் உரைப்பதென்
அடிக்கடி உனக்கே.

411 கருங்களிறு போல்மதத்தால் கண்செருக்கி வீணே
காலம்எலாம் கழிக்கின்றகடையர்கடைத் தலைவாய்
ஒருங்குசிறி யேன்தனைமுன் வந்தருளே வடிவாய்
உள்அமர்ந்தே உள்ளதனை உள்ளபடி உணர்த்திப்
பெருங்கருணை யால்அளித்த பேறதனை இன்னும்
பிறர்அறியா வகைபெரிதும் பெறுதும்என உள்ளே
மருங்கிருந்த எனைவெளியில் இழுத்துவிட்ட தென்னோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.

415 அரிபிரமர் உருத்திரரும் அறிந்துகொள மாட்டா
தலமரவும் ஈதென்ன அதிசயமோ மலத்தில்
புரிபுழுவில் இழிந்தேனைப் பொருளாக்கி அருளாம்
பொருள்அளிக்கப் பெற்றனன்

417 அடிபிடித்துத் திரிகின்றமறைகள் எலாம் காணா
அருள்வடிவைக் காட்டிநம்மை ஆண்டுகொண்ட கருணைக்

430 புல்லவா மனத்தேன் என்னினும் சமயம் புகுதவா
பொய்ந்நெறி ஒழுக்கம்
சொல்லவா பிறரைத் துதிக்கவா சிறிதோர் செப்பனத்
தாயினும் நினையேன்
கல்லவா மனத்தோர் உறவையுங் கருதேன் கனகமா
மன்றிலே நடிக்கும்
நல்லவா எல்லாம் வல்லவா உனையே நம்பினேன்
கைவிடேல் எனையே.

452 கொலைபல புரிந்தே புலைநுகர்ந் திருந்தேன்
கோடுறு குரங்கினிற் குதித்தே
அலைதரு மனத்தேன் அறிவிலேன் எல்லாம் அறிந்தவன்
போல்பிறர்க் குரைத்தேன்

மலைவுறு சமய வலைஅகப் பட்டே மயங்கிய
மதியினேன் நல்லோர்
நலையல எனவே திரிந்தேனன் எனினும் நம்பினேன்
கைவிடேல் எனையே.

474 தெருவிடத்தே விளையாடித் திரிந்தஎனை வந்தே
சிவமாலை அணிந்தனை அச் சிறுவயதில் இந்த
உருவிடத்தே நினக்கிருந்த ஆசைஎலாம் இந்நாள்
ஒடியதோ புதியஒரு உருவுவிழைந் ததுவோ

495 இருளான மலம்அறுத் திகபரங் கண்டே
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ
மருளான பற்பல மார்க்கங்கள் எல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போகத்
தெருளான சுத்தசன் மார்க்கம தொன்றே
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருளானவீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே.

496 இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாறும் சுத்தசன் மார்க்கநன் னீதி
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருட்ஜோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் ஜோதிஎன் ஆண்டவர் நீரே

514 பொதுநடஞ்செய் மலரடிஎன் தலைமேலே அமைத்தீர்
புத்தமுதம் அளித்தீர்என் புன்மைஎலாம் பொறுத்தீர்
சதுமறைஆ கமங்கள்எலாம் சாற்றரிய பெரிய
தனித்தலைமைத் தந்தையரே

518 என்னே செய்வேன் செய்வகை ஒன்றிங் கிதுஎன்
றருள்வாய் இதுவே தருணம்
மன்னே அயனும் திருமா லவனும் மதித்தற்
கரிய பெரிய பொருளே

544 மதிக்குமதிக் கப்புறம்போய் வயங்குதனி நிலையே
மறைமுடிஆ கமமுடிமேல் வயங்கும்இன்ப நிறைவே
துதிக்கும் அன்பர் தொழப்பொதுவில் நடம்புரியும் அரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் தோளில்அணிந் தருளே.

559 சாதிகுலம் சமயமெலாம் தவிர்த்தெனைமேல் ஏற்றி
தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே
ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகி ரண்டம்
ஆருயிர்கள் அகம்புறம்மற் றனைத்தும்நிறை ஒளியே
ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே
சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்
தூயநடத் தரசேஎன் சொல்லும் அணிந் தருளே.

579 ...... பற்றியஎன் பற்றனைத்தும் தன்அடிப்பற் றாகப்
பரிந்தருளி எனைஈன்ற பண்புடைஎந் தாயே

பெற்றியுளார் சுற்றிநின்று போற்றமணிப் பொதுவில்
பெருநடஞ்செய் அரசேஎன் பிதற்றும்உவந் தருளே.

585 வான்பதிக்கும் நெடுமாற்கும் நான்முகற்கும் அரிதாம்
வாழ்வெனக்கே ஆகியுற வரம்அளித்த பதியே
தேன்பரித்த மலர்மணமே திருப்பொதுவில் ஞானத்
திருநடஞ்செய் அரசேஎன் சிறுமொழி ஏற் றருளே.

588 மூர்த்திகளும் நெடுங்காலம் முயன்றாலும் அறிய
முடியாத முடிவெல்லாம் முன்னியஓர் தினத்தே
ஆர்த்தியுடன் அறியஎனக் களித்தருளி அடியேன்
அகத்தினைத்தன் இடமாக்கி அமர்ந்தஅருட் குருவே

601 மதம்என்றும் சமயம்என்றும் சாத்திரங்கள் என்றும்
மன்னுகின்றதேவர்என்றும் மற்றவர்கள் வாழும்
பதம்என்றும் பதம்அடைந்த பத்தர்அனு பவிக்கப்
பட்டஅனு பவங்கள்என்றும் பற்பலவா விரிந்த
விதம்ஒன்றும் தெரியாதே மயங்கிய என் தனக்கே
வெட்டவெளி யாஅறிவித் திட்ட அருள் இறையே
சதம்ஒன்றும் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும் அணிந் தருளே.

620 கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும் அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளமுறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் கறிவித்திங் கெனையே
பிள்ளைஎனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே
தள்ளரிய மெய்யடியார் போற்றமணி மன்றில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே.

621 நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதம் எலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே
கால்வருணங் கலையாதே வீணில் அலை யாதே
காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே
மால்வருணங் கடந்தவரை மேல்வருணத் தேற்ற
வயங்குநடந் தரசேஎன் மாலைஅணிந் தருளே.

623 இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்
மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என அறிந்தார்
மகனேநீ நூல் அனைத்தும் சாலம்என அறிக
செயல் அனைத்தும் அருள்ஒளியால் காண்கஎன எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே
அயல் அறியா அறிவுடையார் எல்லாரும் போற்ற
ஆடுகின்றஅரசே என் அலங்கல் அளிந்திருளே.

624 தோன்றியவே தாகமத்தைச் சாலம்என உரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக்கண் டறியேல்
ஊன்றியவே தாகமத்தின் உண்மைநினக் காகும்
உலகறிவே தாகமத்தைப் பொய்எனக் கண் டுணர்வாய்
ஆன்றதிரு அருட்செங்கோல் நினக்களித்தோம் நீயே
ஆள்கஅருள் ஒளியால்என் றளித்ததனிச் சிவமே
ஏன்றதிரு வழுதெனக்கும் ஈந்தபெரும் பொருளே
இலங்குநடத் தரசேஎன் இசையும் அணிந் தருளே.

625 நான்முகர்நல் உருத்திரர்கள் நாரணர்இந் திரர்கள்
நவில் அருகர் புத்தர் முதல் மதத்தலைவர் எல்லாம்
வான்முகத்தில் தோன்றிஅருள் ஒளிசிறிதே அடைந்து
வானகத்தும் வையகத்தும் மனம்போன படியே
தேன்முகந்துண் டவர் எனவே விளையாடா நின்ற
சிறுபிள்ளைக் கூட்டம்என அருட்பெருஞ்ஜோ தியினால்
தான்மிகக்கண் டறிகஎனச் சாற்றியசற் குருவே
சபையில்நடத் தரசேஎன் சாற்றும் அணிந் தருளே.

633 எத்துணையும் சிறியேனை நான்முகன்மால் முதலோர்
ஏறரிதாம் பெருநிலைமேல் ஏற்றிஉடன் இருந்தே
மெய்த்துணையாம் திருவருட்பே ரமுதம்மிக அளித்து
வேண்டியவா றடிநாயேன் விளையாடப் புரிந்து
சுத்தசிவ சன்மார்க்க நெறிஒன்றே எங்கும்
துலங்கு அருள் செய்தபெருஞ் சோதியனே பொதுவில்
சித்துருவாய் நடம்புரியும் உத்தமசற் குருவே
சிற்சபைஎன் அரசேஎன் சிறுமொழிஏற் றருளே.

638 மன்பதை வகுக்கும் பிரமர்நா ரணர்கள் மன்னுருத்
திரர்களே முதலா
ஒன்பது கோடித் தலைவர்கள் ஆங்காங் குறுபெருந்
தொழில்பல இயற்றி
இன்புறச் சிறிதே கடைக்கணித் தருளி இலங்கும்ஓர்
இறைவன்இன் றடியேன்.
அன்பெனும் குடிசை நுழைந்தனன் அந்தோ
அவன்தனை மறுப்பவர் யாரே.

639 தன்னிக ரில்லாத் தலைவஎன் றரற்றித் தனித்தனி
மறைகள் ஆ கமங்கள்
உன்னிநின் றோடி உணர்ந்துணர்ந் துணரா ஒருதனிப்
பெரும்பதி உவந்தே
புன்னிக ரில்லாப் புலையனேன் பிழைகள் பொறுத்தருட்
பூரண வடிவாய்
என்னுளம் புகுந்தே நிறைந்தனன் அந்தோ எந்தையைத்
தடுப்பவர் யாரே.

657 குற்றமெலாம் குணமாக் கொள்ளும்
குணத்தானைச் சமயமதக் குழிநின் றென்னை
எடுத்தானை எல்லாஞ்செய் வல்ல சித்தே
ஈந்தானைக் கண்டுகளித் திருக்கின் றேனே.

689 மதத்திலே மயங்கா மதியிலே விளைந்த
மருந்தைமா மந்திரந் தன்னை
இதத்திலே என்னை இருத்திஆட் கொண்ட
இறைவனைக் கண்டுகொண் டேனே.

705 சமயமும் மதமும் கடந்ததோர் ஞான
சபைநடம் புரிகின்ற தனியைத் ............

717 உலகுபல் கோடி கோடிகள் இடங்கொள் உலப்பிலா
அண்டத்தின் பகுதி
அலகுகாண் பரிய பெரியகூட் டத்த அவைஎலாம்
புறத்திறைச் சார்பில்
விலகுறா அணுவில் கோடியுள் ஒருகூற் றிருந்தென
விருந்தன மிடைந்தே
இலகுபொற் பொதுவில் நடம்புரி தருணத் தென்பர்வான்
திருவடி நிலையே.

718 தடையுறாப் பிரமன் விண்டுருத் திரன்மா யேச்சுரன்
சதாசிவன் விந்து
நடையுறாப் பிரமம் உயர்பரா சத்தி நவில்பர சிவம்
எனும் இவர்கள்
இடையுறாத் திருச்சிற் றம்பலத் தாடும் இடதுகாற்
கடைவிரல் நகத்தின்
கடையுறு துகள் என் றறிந்தனன் அதன்மேற் கண்டனன்
திருவடி நிலையே.

719 அடர்மலத் தடையால் தடையுறும் அயன்மால் அரன்மயேச்
சுரன்சதா சிவன்வான் படர்தரு
விந்து பிரணவப்பிரமம் பரைபரம் பரன்எனும்
இவர்கள்
சுடர்மணிப் பொதுவில் திருநடம் புரியும்
துணையடிப் பாதுகைப் புறத்தே
இடர்கெட வயங்கு துகள் என அறிந்தே ஏத்துவன்
திருவடி நிலையே

720 இகத்துழல் பகுதித் தேவர்இந் திரன்மால் பிரமன்ஈ
சானனே முதலாம்
மகத்துழல் சமய வானவர் மன்றின் மலரடிப்
பாதுகைப் புறத்தும்
புகத்தரம் பொருந்தா மலத்துறு சிறிய புழுக்கள்என்
றறிந்தனன் அதன்மேல்
செகத் தொடர் பிகந்தார் உளத்தமர் ஒளியில்
தெரிந்தனன் திருவடிநிலையே.

736 சாதியைநீள் சமயத்தை மதத்தைஎலாம்
விடுவித்தென் தன்னை ஞான
நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க
நிலைதனிலே நிறுத்தி னானைப்
பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்
பராபரனைப் பதிஅ னாதி
ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்ஜோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.

774 தத்துவம் அனைத்தும் தவிர்த்துநான் தனித்த தருணத்தில்
கிடைத்ததொன் றென்கோ
சத்துவ நிரம்பும் சுத்தசன் மார்க்கந் தனில்உறும்
அனுபவம் என்கோ

796 அனந்தமறைஆகமங்கள் அளப்பரிய சிவமே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
மனந்தருவா தனைதவிர்த்தோர்

927 மதம்பிடித் தவர்எல்லாம் வாய்ப்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவர் எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினார் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ்ஜோதி
என்னைய னேபள்ளி யெழுந்தருள் வாயே.

945 நீண்ட மறைகள் ஆகமங்கள் நெடுநாள் நெடுநாள்
முயன்று வருந்திநின்று
வேண்ட அவைகட் கொருசிறிதும் விளங்கக்
காட்டா தென்மொழியைப்
பூண்ட அடியை என்தலைமேல் பொருந்தப்
பொருத்தி என்தன்னை
ஆண்ட கருணைப் பெருங்கடலே அடியேன்
உன்றன் அடைக்கலமே.

961 தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலபல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம்ஒன் றில்லார்
மேல்விளை வறிகிலர் வீண்கழிக் கின்றார்
எய்வந்த துன்பொழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந்தந் தீரே.

978 ஊடல்செய் மதமும் சமயமும் இவற்றில் உற்றகள்
பனைகளும் தவிர்ந்தேன்
பாடல்செய்மனத்தால் கலங்கினேன் எனினும்
மன்றினை மறந்ததிங்குண்டோ.

995 மதத்திலே சமய வழக்கிலே மாயை மருட்டிலே
இருட்டிலே மறவாக்
கதத்திலே மனத்தை வைத்துவீண் பொழுது கழிக்கின்றார்
கழிக்கநான் உன்பூம்
பதத்திலே மனத்தை வைத்தனன் நீயும் பரிந்தெனை
அழிவிலா நல்ல
பதத்திலே வைத்தாய் எனக்கிது போதும் பண்ணிய
தவம்பத் ததுவே.

996 குலத்திலே சமயக் குழியிலே நரகக் குழியிலே
குமைந்துவீண் பொழுது
நிலத்திலே போக்கி மயங்கிஏ மாந்து நிற்கின்றார்

978 ஊடல்செய் மதமும் சமயமும் இவற்றில் உற்றஎன்
பனைகளும் தவிர்ந்தேன்
வாடல்செய்மனத்தால் கலங்கினேன் எனிலும்
மன்றினை மறந்ததிங்குண்டோ.

1005 சாதிமதம் சமயமுதற் சங்கற்ப விகற்பம்எலாம் தவிர்ந்து போக
ஆதிநடம் புரிகின்றான் அருட்சோதி எனக்களித்தான்
அந்தோ அந்தோ.

1006 துரியபதம் அடைந்தபெருஞ் சுத்தர்களும் முத்தர்களும்
துணிந்து சொல்லற்
கரியபதம் எனக்களித்தான் அம்பலத்தில் ஆடுகின்றான்
அந்தோ அந்தோ.

1014 எக்கரையும் காணாதே இருட்கடல் கிடந்தேனை
எடுத்தாட் கொண்டு
அக்கரைசேர்த் தருளெனுமோர் சர்க்கரையும்
எனக்களித்தான் அந்தோ அந்தோ

1112 மருளாத ஆகமங்கள் மாமறைகள் எல்லாம்
மருண்டனவே என்னடி என் மனவாக்கின் அளவோ....

1154 அம்பலத்தே ஆடுகின்ற அடிஇணையின் பெருமை
வேதியனும் திருமாலும் உருத்திரரும் அறியார்
விளைவறியேன் அறிவேனோ விளம்பாய்என் தோழி

1161 மதத்தலைமை பதத்தலைமை வாய்த்தனர் அங் கவர்பால்
இறங்கலேன் பேசுதலால் என்பயனோ நடஞ்செய்
இறைவர்அடிப் புகழ்பேசி இருக்கின்றேன் யானே.

1272 குலத்தே சமயக் குழியிடத்தே விழுந்திவ் வுலகம் குமையாதே
நலத்தே சுத்த சன்மார்க்கம் நாட்டா நின்றேன்
நாட்டகத்தே

1364 வாதமிடு சமயமத வாதிகள் பெறற்கரிய
மாமதியின் அமுதநிறைவே

1387 பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடும்ஓர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்
சென்னெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதன் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே

1395 சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே.

1473 சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர்ஒருத்தர் அவர் தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்றதருணம் இது கூவுகின்றேன் உமையே.

1477 எய்வகைசார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வம்ஒன்றென் றறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர்
ஐவகைய பூதவுடம் பழிந்திடில்என் புரிவீர்
அழியும்பை அழியாமை ஆக்கும்வகை அறியீர்
உய்வகை என் தனித்தந்தை வருகின்றதருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே.

1501 ஆரணமும் ஆகமமும் ஆங்காங் குரைக்கின்ற
காரணமும் காரியமும் காட்டுவித்தான் - தாரணியில்
கண்டேன் களிக்கின்றேன் கங்குல்பகல் அற்றவிடத்
துண்டேன் அமுதம் உவந்து

1502 துன்மார்க்கம் எல்லாம் தொலைத்துவிட்டேன் சுத்தசிவ
சன்மார்க்க சங்கம் தலைப்பட்டேன் - என்மார்க்கம்
நன்மார்க்கம் என்றேவான் நாட்டார் புகழ்கின்றார்
மன்மார்க்கத் தாலே மகிழ்ந்து.

1503 பன்மார்க்கம் எல்லாம் பசையற் றொழிந்தனவே
சன்மார்க்கம் ஒன்றேதழைத்ததுவே - சொன்மார்க்கத்
தெல்லா உலகும் இசைந்தனவே எம்பெருமான்
கொல்லா நெறி அருளைக் கொண்டு.

1504 சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுப
நீதிஇயல் ஆச்சிரம நீட்டென்றும் ஓதுகின்ற
பேயாட்ட மெல்லாம் பிதிரிந்தொழிந்த வேபிறர்தம்
வாயாட்டம் தீர்ந்தனவே மற்று.


1511 சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போல்காட்ட நேராவே - நேத்திரங்கள்
சிற்றம் பலவன் திருவருள்சீர் வண்ணமென்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து.

1512 வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின்விளைவறியீர் - சூதாகச்
சொன்னவலால் உண்மைவெளி தோன்றஉரைக்கவிலை
என்ன பயனோ இவை.

1541 திருநெறிஒன் றேஅதுதான் சமரசசன் மார்க்கச்
சிவநெறிஎன் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனையாட்கொண்ட டருளமுதம் அளித்து
வல்லபசத் திகளெல்லாம் வழங்கியஓர் வள்ளல்
பெருநெறியில் சித்தாடத் திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினால் கருத்தொருமித் துண்மைஉரைத் தேனே.



சுத்தசன்மார்க்க
கொடி






**மரணமில்லா பெருவாழ்வு பூரணசித்தி பெற்ற**
**சித்திவளாகம். (மேட்டுக்குப்பம்) 30.01.1874**



சத்திய ஞான சபை 1871





சத்திய தர்மசாலை 1867

1544 சத்தியவே தாந்தமெலாம் சித்தாந்தம் எல்லாம்
தனித்தனிமேல் உணர்ந்துணர்ந்தும் தனையுணர்தற் கரிதாய்
நித்தியசிற் சபைநடுவே நிறைந்துநடம் புரியும்
நித்தபரி பூரணனைச் சித்தசிகா மணியை
அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்
ஆவியைஎன் ஆவியிலே அமர்ந்ததயா நிதியைச்
சித்தியெலாம் எனக்களித்த சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ நிந்தைஎலாம் தவிர்ந்தே.

1546 முயன்றுலகில் பயன்அடையா மூடமதம் அனைத்தும்
முடுகி அழிந் திடவும்ஒரு மோசமும்இல் லாதே
இயன்றஒரு சன்மார்க்கம் எங்குநிலை பெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல் இதுதருணம் கண்டீர்
துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்றஎழு கின்றதிது தொடங்கிநிகழ்ந் திடும்நீர்
பயின்றறிய விரைந்துவம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே.

1549 குறித்துரைக்கின் றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின்
கோணும்மணக் குரங்காலே நாணுகின்றஉலகீர்
வெறித்தஉம்மால் ஒருபயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறுநினை யாதீர்
பொறித்தமதம் சமயம்எலாம் பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம்ஒன்றே பொருள்எனக்கண் டறிமின்
செறித்திடுசிற் சபைநடத்தைத் தெரிந்துதுதித் திடுமின்
சித்திஎலாம் இத்தினமே சத்தியம்சேர்ந் திடுமே.

1571 முன்னுள மார்க்கங்கள் யாவும் முடிந்தன
மன்னுள சுத்தசன் மார்க்கம் சிறந்தது
பன்னுளந் தெளிந்தன பதிநடம் ஓங்கின
என்னுளத் தருட்பெருஞ் ஜோதியார் எய்தவே.

1582 இயங்காளிபுகரடி எனப் பெயர்கேட் டுளம்நடுங்கி
இருந்தேன் ஊரில்
சயங்காளிக் கோயிலைக்கண் டஞ்சிமனம் தழுதழுத்துத்
தளர்ந்தேன் இந்தப்

பயங்காளிப் பயல்போலப் பயந்தவர்கள் எங்குளர்காண்
பதியே என்னை
வயங்காளில் ஒருவன்என நினையேல்கைப்பிள்ளை என
மதித்தி டாயே.

1591 கிழக்குவெளுத் ததுகருணை அருட்ஜோதி உதயம்
கிடைத்ததென துளக்கமலம் கிளர்ந்ததென தகத்தே
சழக்குவெளுத் ததுசாதி ஆச்சிரமா சாரம்
சமயமதா சாரம்எனச் சண்டையிட்ட கலக
வழக்கு வெளுத் ததுபலவாம்பொய்ந்நூல்கற் றவர்தம்
மனம்வெளுத் ததுசிவமே பொருள் எனும் சன் மார்க்க
முழுநெறியில் பரநாத முரசு முழங் கியதே.

1626 சேய்போல் உலகத் துயிரைஎல் லாம்எண்ணிச் சேர்ந்துபெற்ற
தாய்போல் உரைப்பர்சன் மார்க்கசங் கத்தவர்
சாற்றும்எட்டிக்
காய்போல் பிறர்தமைக் கண்டால் கசந்துள் கடுகடுத்தே
நாய்போல் குரைப்பர்துன் மார்க்கசங் கத்தவர் நானிலத்தே.

1705 கண்கொண்ட பூதலம் எல்லாம்சன் மார்க்கம் கலந்துகொண்டே
பண்கொண்ட பாடல் பாடிப் படித்துப் பரவுகின்றார்
விண்கொண்ட சிற்சபை ஒன்றே நிறைந்து விளங்குகின்ற
தெண்கொண்ட மற்றை மதமார்க்கம் யாவும் இறந்தனவே.

1734 சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடும் கேட்பீர்
என்மார்க்கத் தெனைநுமக்குள் ஒருவனெனக் கொள்வீர்
எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவம் ஒன்றே
தன்ஆணை என்ஆணை சார்ந்தறிமின் ஈண்டே

1735 ஆதியும்நடுவும் அந்தமும் இல்லா
அருட்பெருஞ் ஜோதிஎன் உளத்தே
நீதியில் கலந்து நிறைந்தது நானும்
நித்தியன் ஆயினேன் உலகீர்

சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே
சத்தியச் சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே.

1802 சமயத் தெய்வம் பலவும் சிறிய துரும்ப தென்ன வே
சாற்றப் புகினும் சாலா அருளின் பெருமை உன்ன வே
அமையும் அண்டப் பகுதி பலவும் அணுவின் பொடியி லே
அனந்தத்தொன்றென் றுரைத்துஞ்சாலாநின்பொன்னடியிலே.
எனக்கும் உனக்கும்

1824 வேதா கமத்தின் அடியும் நடுவும் முடியு மற்று மே
வெட்ட வெளிய தாகி விளங்கக் கண்டேன் முற்று மே
நாதா சிறிய நாய்க்கும் கடையேன் முற்றும் கண்ட தே
நானோ கண்டேன் எந்தாய் கருணை நாட்டம் கண்ட தே.
எனக்கும் உனக்கும்

1919 எச்சம யங்களும் பொய்ச்சம யமென்றீர்
இச்சம யம்இங்கு வாரீர்
மெய்ச்சம யந்தந்தீர் வாரீர்.

1984 சதுமறைஆகம சாத்திரம் எல்லாம்
சந்தைப் படிப்புநம் சொந்தப் படிப்போ
விதுநெறி சுத்தசன் மார்க்கத்தில் சாகா
வித்தையைக் கற்றனன் உத்தரம் எனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தனன் என்றும்
பொன்றாமை வேண்டிடில் என்தோழி நீதான்
அதுஇது என்னாமல் ஆடேடி பந்து
அருட்பெருஞ் ஜோதிகண் டாடேடி பந்து.

2076 தருநெறி எல்லாம்உள் வாங்கும் - சுத்த
சன்மார்க்கம் என்றோர் தனிப்பேர்கொண் டோங்கும்
திருநெறிக் கேசென்று பாரீர் - திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி.

2077 எம்பொருள் எம்பொருள் என்றே- சொல்லும்
எல்லாச் சமயத்துள் எல்லார்க்கும் ஒன்றே
செம்பொருள் என்பது பாரீர் - திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி.

2078 சைவ முதலாக நாட்டும் - பல
சமயங்கள் எல்லாம் தனித்தனிக் காட்டும்
தெய்வம் இதுவந்து பாரீர் - திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி

2113 மதித்த சமயமத வழக்கெல்லா மாய்ந்தது
வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழிந்தது
கொலையும் களவுமற்றைப் புலையும் அழிந்தது.

2114 குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று
குதித்த மனமுருட்டுக் குரங்கு முடங்கிற்று
வெறித்தவெவ் வினைகளும் வெந்து குலைந்தது
விந்தைசெய் கொடுமாயைச் சந்தையும் கலைந்ததுஇதுநல்ல

2141 எச்சம யத்தும் இலங்கிய பாதம்
எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்குமாம் பாதம்
அச்சம் தவிர்த்தென்னை ஆட்கொண்ட பாதம்
ஆனந்த நாட்டுக் கதிபதி பாதம்.

2177 சாதி சமயச் சழக்கெலாம் அற்றது
சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது

2213 சாதி சமயச் சழங்கைவிட் டேன்அருட்
ஜோதியைக் கண்டேன டி - அக்கச்சி
ஜோதியைக் கண்டேனடி.

2294 சன்மார்க்கம் நன்மார்க்கம் நன்மார்க்கம்
சகமார்க்கம் துன்மார்க்கம் துன்மார்க்கம்

**இவை சமய கட்டுப்பாட்டு ஆசாரங்களே**

விபூதி கொடுத்தல், விபூதி பூசுதல், நெய்விளக்கு வைத்தல்,
மொட்டை போடுதல், முடி வளர்த்தல், அடையாள குறியீடுகள்,
குடும்பத்தை விட்டு வருதல், சந்நியாசம், தியானம், விரதம், பூ இடுதல்
இவையனைத்தும் சமய கட்டுப்பாட்டு ஆசாரங்கள் ஆகும்.

அருட்பெருஞ்ஜோதி அகவல்

| வரிகள் | அகவல் |
| --- | --- |
| 1-2 | அருட்பெருஞ் ஜோதி யருட்பெருஞ் ஜோதி<br>அருட்பெருஞ் ஜோதி யருட்பெருஞ் ஜோதி |
| 5-6 | ஆகம முடிமேல் ஆரண முடிமேல்<br>ஆகநின் றோங்கிய வருட்பெருஞ் ஜோதி |
| 21-22 | ஒன்றென விரண்டென வொன்றிரண் டெனவிவை<br>யன்றென விளங்கிய வருட்பெருஞ் ஜோதி |
| 29-30 | சுத்தசன் மார்க்க சுகத்தனி வெளியெனும்<br>அத்தகைச் சிற்சபை யருட்பெருஞ் ஜோதி |
| 51-52 | சாகாக் கலைநிலை தழைத்திடு வெளியெனும்<br>ஆகா யத்தொளி ரருட்பெருஞ் ஜோதி |
| 61-62 | சமயங் கடந்த தனிப்பொருள் வெளியாய்<br>அமையுந் திருச்சபை யருட்பெருஞ் ஜோதி |
| 115-116 | சாதியு மதமுஞ் சமயமுங் காணா<br>ஆதிய நாதியா மருட்பெருஞ் ஜோதி |
| 211-212 | சாதியு மதமுஞ் சமயமும் பொய்யென<br>ஆதியி லுணர்த்திய வருட்பெருஞ் ஜோதி |
| 293-294 | சமயங் குலமுதற் சார்பெலாம் விடுத்த<br>அமயந் தோன்றிய வருட்பெருஞ் ஜோதி |

**ஐந்து மலங்கள்**

ஆணவம், கன்மம், மாயை, மாமாயை மற்றும் திரோதாயி

1317-1318 தாழ்வெலாந் தவிர்த்துச் சகமிசை யழியா
வாழ்வெனக் களித்த வளரொளி மணியே

1327-1328 மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே

1543-1544 வேதமு மாகம விரிவும் பரம்பர
நாதமுங் கடந்த ஞானமெய்க் கனலே

1553-1556 சமரச சத்தியச் சபையி னடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே

சபையென துளமெனத் தானமர்ந் தெனக்கே
அபய மளித்ததோ ரருட்பெருஞ் ஜோதி

1567-1568 சாகாக் கல்வியின் றரமெலா முணர்த்திச்
சாகா வரத்தையுந் தந்துமேன் மேலும்

*************************************************************

**ஒரு புதிய மார்க்கம். தனி நெறி.**





சுத்தசன்மார்க்க கொடி

வள்ளலார் கண்டு வெளிப்படுத்திய மார்க்கம் ஒரு புதிய மார்க்கம். அம்மார்க்க நெறி தனி நெறியாகும். அம்மார்க்கத்திற்கென தனியாக விதிகள், மரபுகள், லட்சியம், தகுதிகள், கட்டளைகள், கல்வி, சாதனம், பழக்கம், அறிவிப்புகள், மந்திரம், பாடல்கள், உரைநடை, உபதேசக்குறிப்புகள், அம்மார்கத்திற்கான முக்கியத்தடைகள், ஆகாரம், ஒழுக்க அட்டவணை, பயன்கள், நிலையங்கள் என உள்ளது. உலகில் எந்தவொரு சமய மத மார்க்கங்களுக்கும் இல்லாத தனி கொடி இம்மார்க்கத்திற்கு உண்டு.

இவையனைத்தும் அம்மார்க்கத்தை பெற்ற வள்ளலாரே அன்றே தந்துள்ளார்கள். இன்றைய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இம்மார்க்கத்தை **ஒரு புதிய மார்க்கம்** மற்றும் **தனி நெறி கொண்டது** என அறிவிக்கக் கூடியதாகவே உள்ளது.

- ஏ.பி.ஜெ. அருள்

# சொல் அட்டவணை

அக அனுபவம் . . . . . 43, 46, 52
அறிவு . . . . . 8, 38, 51
அன்னதானம் . . . . . 51
ஆசாரங்களின் வகைகள் . . . . . 11
ஆசாரங்களை ஒழித்தல் . . . . . 11, 36
ஆறாவது திருமுறை . . . . . 8, 17
இயற்கை . . . . . 41
உண்மைப்பொதுநெறி . . . . . 21, 42
ஒழுக்கங்கள் . . . . . 5, 33, 34, 38
ஒருமை . . . . . 38
ஒத்து வாயடங்கி மனமடங்கி இருக்க வேண்டும் . . . . . 9
ஓம் . . . . . 49
கருணை . . . . . 39
கடவுள் ஒருவரே . . . . . 5, 24
கருணை விருத்திக்கு தடைகள் . . . . . 35
கடைசி அறிவிப்பு . . . . . 30
கடவுள் நிலையறிதல் . . . . . 33
கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது . . . . . 5, 26
சமயங்கள் . . . . . 13
சன்மார்க்கம் சிவசன்மார்க்கம் . . . . . 19
சமய, மத மார்க்கங்கள் அந்நியமா? . . . . . 24, 50
சமய மத மார்க்கங்களில் லட்சியம் கூடாது . . . . . 22
சமய மத ஆசாரங்களில் மனம் பற்றக்கூடாது . . . . . 35
சமய நூல்களின் உண்மை . . . . . 53
சமயத்தில் வைத்திருந்த லட்சியம் என்னை தூக்கிவிடவில்லை . . . . . 25
சமய மதங்கள் குறித்து சாடிய பாடல்கள் . . . . . 63
சமாதிப் பழக்கம் . . . . . 37
சாதனம் . . . . . 35
சாகாக்கல்வி . . . . . 45

சிவாய நம நமச்சிவாய . . . . . 49
சுத்த சன்மார்க்கக் கொள்கை . . . . . 53
சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் . . . . . 24
சுத்த சன்மார்க்க கடவுள் . . . . . 18, 19, 30
சுத்த சன்மார்க்க மரபு நான்கு . . . . . 14
சுத்த சன்மார்க்க லட்சியம் . . . . . 22
சுத்த சன்மார்க்கத்தை உலகிற்கு வெளிப்படுத்திய நாள் . . . . . 5, 27
சைவம், வைணவம் . . . . . 22, 23
தயவு . . . . . 11, 37
தவம் . . . . . 49
தனி நெறி . . . . . 6, 25
திருவருட்பாவில் உள்ள சமய ஸ்தோத்திரங்கள் . . . . . 13
தியானம் . . . . . 49
நல்ல விசாரணை . . . . . 41
நெய் விளக்கு . . . . . 79
பன்முக ஞானம் . . . . . 2
பாசுரப் பாடல்கள் . . . . . 55
பெருங்கருணை . . . . . 32
மதங்கள் . . . . . 13
மலங்கள் ஐந்து . . . . . 80
முடிபான கொள்கையில் வெளிவந்த நூல்கள் . . . . . 8
முந்தின இரவில் சொன்னது . . . . . 9, 12
மூச்சுப்பயிற்சி . . . . . 49
வள்ளலார் தெய்வமா? . . . . . 49
வள்ளலார் கண்ட கடவுள் (பெருங்கருணை) . . . . . 32
வள்ளலார் பெற்ற வடிவம் . . . . . 46
வள்ளலார் குறிப்பிடும் சுத்தசிவம் . . . . . 19
வாலிபப் பருவத்தில் வள்ளலார் . . . . . 29
விரதம் . . . . . 49
விபூதி . . . . . 79
வேலாயுத முதலியார் . . . . . 62